
வஹ்ஹாபிய எதிர்ப்புப் பிரச்சாரப் பணி II

மதீனாவில் வாழும் மஹ்மூது நபியை தரிசிக்கச் செல்வது மகா பாவமா?



ஏ. எம். எஸ். நஸீம், பீ. ஏ. (அஸ்ஹரி)
இஸ்லாமிய இறையியற் பீடம்,
அல்-அஸ்ஹர் பல்கலைக் கழகம்,
கைரோ, எகிப்திய அரபுக் குடியரசு.

சமர்ப்பணம்

மதீனா நகரில் வாழ்கின்ற
மன்னர் மஹ்மூத் நபிமணியே
மதிபோல் ஒளிர்ந்து மாநிலத்தை
மதிப்பாய்ச் செழிக்கச் செய்தவரே
நிதமும் நிலைக்கும் நும்புகழை
நிகழ்த்தும் இந்த நன்நூலை
மதிப்பாய் நுமக்கே சமர்ப்பித்தேன்
மகிழ்ந்தே ஏற்பீர் மாநபியே.

பொருளடக்கம்

- சமர்ப்பனம்
- பொருளடக்கம்
- முன்னுரை
- நுழைவாயிலில்
- நபி ﷺ அவர்களின் புனித கப்ரை தரிசிக்கச் செல்வதற்கான ஆதாரங்கள்.

- அல்-குர்ஆன்.
  ஐயமும் தெளிவும் கூற்று.. 1.
  ஐயமும் தெளிவம் கூற்று.. 2.

- புனித சுன்னா.
  ஸியாரதுல் குபூர் எனப்படும் கப்ருகளைத் தரிசித்தல்.
  நபி ﷺ அவர்களுடைய புனித கப்ரை தரிசித்தல்.

- இஜ்மாஉ.
  இமாம் இப்னு தைமிய்யாவும் ஸியாரத்தும.
  புனித கப்ரு ஷரீபில் பிரார்த்தனைப் புரிதல்.

- முடிவுரை.

மதீனாவில் வாழும் மஹ்மூது நபியை தரிசிக்கச் செல்வது

மகா பாவமா ?

ஏ.எம்.எம். நஸீம், பீ.ஏ. (அஸ்ஹரி)
இஸ்லாமிய இறையியற் பீடம்,
அல்-அஸ்ஹர் பல்கலைக் கழகம்,
கைரோ, எகிப்திய அரபுக் குடியரசு.

BIBLOGRAPHICAL DATA

Title of the Book	: Madeenavil valum Mahmoodu Nabiyay Tharisikkach shelvathu Maha Pawama ?
Author	: A.M.M. Naseem, B.A. (Azhari).
Language	: Tamil
Size of Book	:
Date of publication	:
No of pages	:
Typeset by	:
Printed by	:
Published by	:
Price	: Rs 30/=.

بسم الله الرحمن الرحيم

முன்னுரை

அனர்த்தங்கள் பலவிதம். ஹிஜ்ரி 1417 (1997) ஹஜ் கடமையின்-போது மினா மைதானத்தில் ஏற்பட்ட அனர்த்தங்கள், இரண்டு. ஹாஜிகளின் நலன் கருதி நடை முறையில் இருக்கும் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்யப்பட்டதால் பாரிய தீ விபத்தொன்று ஏற்பட்டு நூற்றுக்கணக்கானோர் வீர மரணமடைந்தனர்.

அடுத்தது இஹ்ராமுடைய நிலையில் தாம்பத்திய உறவு கொள்வதும், கெட்ட பேச்சுக்கள் பேசுவதும் வீண் தர்க்கம் செய்வதும் கூடாது என புனித அல்-குர்ஆனின் (பகரா:197) அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்த ஓர் குழப்பவாதி பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்தினார். அது கைகலப்பில் முடியாமல் தப்பியது அதிசயமே.

ஹஜ்ஜுடைய கடமைகள் முடிந்ததும் நபி ﷺ அவர்களைத் தரிசிக்க மதீனாவுக்கு செல்ல வேண்டியதில்லை. அதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை .

என்றார் அக்குழப்பவாதி. பிரபல்யமான ஒரு சபையின் தலைமையில் அமர்ந்து கொண்டிருக்கும் அவரது அறிவுத்திறமை அறியப்-படாததல்ல. ஏதாவது ஒரு பிரச்சினை ஏற்பட்டு ஆய்வுக்கு முன் வைக்கப்பட்டால், ஒன்று காணாமல் போய்விடுவார் அல்லது மௌன விரதம் அனுஷ்டிப்பார். இதுதான் இவரது அறிவுச்சாதனை. மேலும் இஸ்லாமிய உலகின் புகழ்பெற்ற அரபு நூற்களை அவரால் போதிக்க முடியாமல் போகவே, நாளேடுகள்போல் எழுதப்பட்ட சிற்சிறு நூற்களை தமது பாடத்திட்டத்தில் புகுத்தி 20ம் நூற்றாண்டில் அறிவுப்புரட்சியை ஏற்படுத்திய பெருமையும் அவரையே சேரும். இது அவரது மாணவர்கள் வரலாற்றுக்கு வழங்கிய சாட்சி. இவரது தலையிலும் இவர் போன்ற வஹ்ஹாபிகளின் தலைகளிலும் தேங்கி உறைந்து கிடக்கும் மடமையை படம் பிடித்துக்காட்டவே இச் சிறுநூல் எழுதப்பட்டது.

இது எனது இரண்டாவது நூல் **(இதுதான் சத்தியத்தின் தீர்வு வஹ்ஹாபிகளுக்கு ஒரு மறுப்பு)** என்ற சிறு நூலை எழுதி

வஹ்ஹாபிய களை பிடுங்கும் தூய பணியை பேனா முனையால் ஆரம்பித்தேன். அதன் இரண்டாவது பதிப்பும் புதிய இணைப்புகளுடன் வெளியாகிவிட்டது. ஏட்டிக்குப் போட்டியாக பிரசுரங்கள் எழுதுவதில் தேர்ச்சிப் பெற்ற வஹ்ஹாபிகளில், ஒருவர்கூட அதற்கு இதுவரை பதிலளிக்கவில்லை. ஆனால், வயிற்றுப்பிழைப்புக்காக காதியானிஸம், ஷியாஇஸம் போன்றவைக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கி நாளொன்றுக்கு ஒரு பிரசுரம் வெளியிடத் தவறுவதில்லை. ஆனால் இவைகளைவிட வஹ்ஹாபிஸம் எந்த ரீதியில் உயர்வு பெறுகின்றதென்று தெரியவில்லை. நஜீஸ்கள் பலவகைப்படும். ஆனால் அதில் உயர்வு தாழ்வு கிடையாது. என்பதைப் புரிந்து கொள்ளவும். மேற்குறிப்பிட்ட நூலில் இரண்டாம் பதிப்பில் வஹ்ஹாபிகள் பற்றிய அதிசய உண்மைகளை அப்பட்டமாக முன் வைத்துள்ளோம்.

மேலும் இலங்கை அரபுக் கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் வஹ்ஹாபிய (அகீதாவை) கொள்கையை உட்புகுத்த முற்பட்டபோது அதனை பலமாக எதிர்த்தோம். வெறும் எதிர்ப்பல்ல, ஆக்கபூர்வமான எதிர்ப்பு. ஏன் எதிர்க்கிறோம் என்பதனைத் தெளிவுபடுத்தி சுமார் 25 பக்கங்களில் தூய அரபு மொழியில் அச்சிடப்பட்ட மகஜரை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை உட்பட அனைத்து அரபுக் கல்லூரிகள், இயக்கங்கள் அனைத்துக்கும் பதிவுத்தபாலில் 4-8-1997ல் அனுப்பி வைத்தோம்.

(كشف الاستار عن تجسيم وهابية الاشرار)

இறைவனுக்கு உருவம் கற்பிக்கும் வஹ்ஹாபிய கொள்கையின் முகமூடியைக் கிழித்தெறிதல்.

என அதற்குப் பெயரிட்டிருந்தோம். அரபுலகின் புகழ் பெற்ற பேராசிரியர்கள் சிலர் அதற்காக என்னை வாழ்த்தியதுடன் வேறு பல தகவல்களையும் நூற்களையும் அனுப்பி வைத்திருந்தனர். ஆனால் இதுவரை ஒரு வஹ்ஹாபி கூட வாய் திறக்கவில்லை.

இவ்வாறு ஆக்கபூர்வமான அறிவியல் ரீதியான ஆய்வுகளை விதிமுறைப்படி நாம் முன் வைக்கும்போது அவர்களுக்கு ஏற்படும் நடுக்கத்தை சுலபமாக அவதானிக்கலாம். கொட்டி வழங்கும் இப்தார், நோன்பு போனஸ், உழ்ஹிய்யா, பெருநாள் புத்தாடைகள், மாதாந்த கொடுப்பனவுகள் போன்றவற்றால் முழு இஸ்லாமிய சமூகமும் மதி மயங்கப் போவதில்லை. இக்லாஸ் தூய எண்ணம் கலந்த சத்தியமே

என்றும் மிகைக்கும். எச்சில் காசுகளல்ல என்பதை சுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த ஆலிம்கள் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். பணத்துக்கும் பதவிக்கும் தனவந்தர்களின் அன்புக்கும் ஏங்கி தலை குனிந்து பேசும் அவல நிலையிலிருந்து ஆலிம்கள் விடுதலை பெற வேண்டும். நாம் வறியவர்களாக இருக்கலாம். வறுமைக்கும் சத்தியத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆக செல்வத்தினாலும் எதையும் சாதித்துவிட முடியாது என்பதை நாம் உணர வேண்டும்.

இங்கு ஒரு விடயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். இலங்கையில் நாங்கள்தான் அறிஞர்கள் புத்தி ஜீவிகள் என்ற மமதை உணர்வு கொண்டோர் சிலரின் நடவடிக்கைகள் வஹ்ஹாபிகளின் முட்டாள்தனமான பிரச்சாரப் பிழைப்புக்கு தீனி போடுகிறது. அவர்களிடம் ஆழமான அறிவுத் திறனின்மையைக் காணலாம். அவர்களிடம் காணப்படும் வாசிப்புப் பழக்கத்தால், அரபு நாடுகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள், நூற்களை மொழி பெயர்த்து தம்மை அறிஞர்களாக சித்தரிக்கும் விசித்திரத்தை அவர்களது நூற்களிலும், வானொலி நிகழ்ச்சிகளிலும். சொற்பொழிவுகளிலும் அவதானிக்கலாம்.

கொழும்பு மருதானையில் தமது தலைமையகத்தைக் கொண்ட ஒரு பிரபல்யமான இயக்கத்தின் முதல்வரோடு எமது சக மௌலவி ஒருவர் கதைத்துக் கொண்டிருந்தார். அப்போது "المجتمع" என்ற அரபு சஞ்சிகையைப் பற்றிய கதையும் வந்தது. உடனே திடுக்கிட்ட முதல்வர் உங்களது மத்ரஸாவிலும் அதை வாசிக்கிறீர்களா? என அதிசயமாக வினவினார். ஏனெனில் அவர்களது பெரும்பான்மையான ஆக்கங்கள் வெறும் காப்பியடிப்பே என்ற உண்மை அம்பலமாகி விடுமே என்ற ஆதங்கம்தான்.

மேலும் இவர்கள் கலாநிதி யூசுப் அல் கர்ழாவி, மர்ஹூம் அஷ்ஷைகு முஹம்மது கஸ்ஸாலி, மர்ஹூம் அஷ்ஷைக் அஸ்ஸெய்யித் ஸாபிக் (அவர்களுக்கு எமது பூரண மரியாதையுடன்) போன்றோரை தவிர அரபுலகிலோ இஸ்லாமிய உலகிலோ வேறு அறிஞர்கள் பிறக்கவில்லை என்பது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தினர். இதற்குச் சான்றாக ஒரு விடயத்தை குறிப்பிடுகிறேன்.

15.08.1997ல் சீனங்கோட்டை பெரிய பள்ளிவாயலில் அறிஞர் ??? மௌலவி ஒருவர் குத்பா பிரசங்கம் நிகழ்த்தினார். அதன் சாராம்சம்

நபி (ஸல்) அவர்களுக்கு எவ்வித சிறப்பம்சங்களும் கிடையாது அவர்கள் அவதரித்தபோது நிகழ்ந்ததாக கூறப்படும் அற்புதங்களுக்கு எவ்வித ஆதாரமும் கிடையாது என்பதாகும்.

இப்பிரசங்கம் பெரும்பரபரப்பையும் பிரச்சினையையும் ஏற்படுத்தியதை யாவரும் அறிவர். ஆனால் எல்லோரும் ஒரு விடயத்தை கவனிக்க மறந்தனர். மேற்கூறப்பட்ட அறிஞர் ??? இந்த அளவு ஆழமாக ஆய்வு செய்திருப்பாரா? அதற்கான திராணியும் தகைமையும் அவரிடம் உண்டா? உண்மையில் அது அவரது ஆய்வல்ல வெறும் காப்பியடிப்பு மட்டும்தான். நிருபிக்குமாறு கேட்டிருந்தால் திணறியிருப்பார். ஏன் தெரியுமா? இதை எழுதிய யூசுப் கர்ழாவி அவர்கள் மேலோட்டமாக சுட்டிக் காட்டினாரே தவிர ஆதாரங்களை குறிப்பிடடவில்லை.

பக்கம் 68. "كيف نتعامل مع السنة النبوية معالم وضوابط"

அதே நூலில் கர்ழாவி அவர்கள் இச்சையின்றி பெண்களுடன் முஸாபஹா (கைலாகு) செய்வதற்கு எவ்விதத் தடையுமில்லை என்று அடித்துக கூறுகிறார் ஏற்றுக் கொள்வீர்களா? அல்லது கை கொடுப்போம் வாரீர்களா?

(பக்கம் 162 - 164)

மேலும் ஒரு சகோதரர், சன்மார்க்க சட்ட விளக்கங்கள் என்ற நூலை வெளியிட்டார். சிலரது நவீன மனப்பாங்குக்கு ஏற்ப ஹலால் ஹராம் விடயங்கள் அத்துமீறிக் கையாளப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அப்பாரதூரமான சட்ட ஆய்வுகளின் தவறான போக்கை சுட்டிக் காட்டி ஆதாரபூர்வமாக ஒரு அழகான விமர்சனத்தை (13 பக்கம்) அரபு மொழி மூலம் பதிவுத் தபாலில் (18.6.1997) அனுப்பி வைத்தோம். திருத்துவது ஒருபுறமிருக்க கிடைத்ததாக ஒரு வார்த்தை கூட எழுதவில்லை.

மேலும் ஒரு சகோதரர், இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் எழுதிய تذكرة الحفاظ என்ற நூலைப்பற்றி குர்ஆனை மனனம் செய்தோர் பற்றி விளக்கும் நூல் என்று அறிமுகப்படுத்தியிருந்தார். ஹாபிழ் என்ற அரபுப்பதத்திற்கு மனனம் செய்தவர் என்ற பொருள்படும். அதன் அடிப்படையில் அந்நூலைத் தொட்டுக் கூடப்பாராக்காமல் வெறும் மொழிபெயர்ப்பாக எழுதிவிட்டார். உண்மையில் ஹதீஸ்களை சரிபிழை கண்டு தரம் பிரிக்கும் திறமைகொண்ட இமாம்களின்

வரிசையையே அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஹாபிழ்கள் என்று சொல்லப்படுவது ஹதீஸ்களை அடிப்படைச் சட்டவியல் மரபாகும். இதை நாம் சுட்டிக்காட்டினோம். நன்றிக்குக்கூட ஒரு வார்த்தை இல்லை.

தமது தவறுகள், பிழைகள் சுட்டிக் காட்டப்படும்போது, பெருமன-துடனும், நன்றியுணர்வுடனும் ஏற்றுக் கொள்ளும் தயாளமனம் ஆலிம்களிடம் காணப்படுவது அரிதே.

மேலும் ஒரு சகோதரர், பன்றியிறைச்சியைத்தான் குர்ஆன் ஹராமாக்கியது? அதன் ஏனைய பாகங்கள் (எழும்பு கொழுப்பு, குடல், ஈரல், போன்றவை) ஹராமாக்கப்படவில்லையென்று விசித்திரமான விளக்கத்தை முன்வைத்தார், அதுமட்டுமல்ல, அல்லாஹ்வுக்கே சவால் விட்டார். அவர்தான் வஹ்ஹாபிகளின் தன்னிகரில்லாத் தலைவர் P. ஸைனுல் ஆபிதீன்.

சுன்னத்தை ஹயாத்தாக்குவோம் என்று விரலசைக்க ஆரம்பித்தனர் பல்லாண்டுகளுக்கு முன்பு. இப்போது பணப் பூசல் ஏற்பட்டு தலைவர்கள் அந்த சுன்னத்தை வாபஸ் வாங்கி விட்டனர். இருந்தும் தொண்டர்களின் கைவிரல்கள் அசையாமல், ஆடாமல் இருக்க முடியாது என்று அடம் பிடிக்கின்றன.

இப்போது, சுன்னத்தை ஹயாத்தாக்குவோம் என்றும் பன்றி இறைச்சியில்லாமல், அதன் பாகங்கள் மாத்திரம் கொண்ட புதிய உணவகம் ஒன்றை ஆரம்பித்தாலும் ஆச்சரியமில்லை.

அல் ஜன்னத் டிசம்பர் 94 & ஜனவரி 1995

இவ்வாறான தகவல்களை இங்கு குறிப்பிடுவதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. சுன்னத் வல் ஜமாஅத்தை சேர்ந்த ஆலிம்களுக்கு முதலில் தன்னம்பிக்கை ஏற்பட வேண்டும். மாயாஜால வார்த்தைகள், அடைமொழிகள், கனல் பறக்கும் வார்த்தைகள், வியப்பூட்டும் தலையங்கங்கள், போன்ற மாயைகளுக்கு முன் மயங்கிவிடலாகாது. நிறை குடம் தழும்பாது, நிறையில் குடமே தழும்பும், என்ற உண்மையை உணர வேண்டும். தம்மிடமிருக்கும் திறமைகளை தீட்டிப் பார்க்க வேண்டும். தமது வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும். நவீன குழப்பவாதிகளின் வினோதமான கருத்துக்கள் எங்கிருந்து ஊற்றெடுக்கின்றன என்றறியும் வேட்கை உண்டாக வேண்டும். அங்கிருந்து, ஒரு இளம் சமூகம் உணர்வுடன் வீறு நடை

போட்டு முன்வந்தால், கயவர்கள் கூட்டம் அழிந்து விடும். ஒழிந்து விடும்.

இந்த ரீதியில் இச்சிறு நூல் இரு விளைவுகளை ஏற்படுத்த வேண்டும் என எதிர்பார்கிறேன்.

1) சர்சைக்குரிய இவ்விடயத்தில் வஹ்ஹாபிகளின் கருத்து ஆதாரபூர்வமற்ற, வெறும் பொய்யான • பிரச்சாரமே என்ற உண்மையை வாசகர்கள் உணர்ந்து கொள்ளல்.

2) இந்த நவீன குழப்பவாதிகளிடம் எவ்வித அறிவியல் தகமைகள் கிடையாது, வெறும் மாயாஜால வார்தைகளைக் கூறி பூச் சாண்டி காட்டி வருகின்றனர் என்ற உண்மையை வாசகர்கள் உணர்ந்து கொள்ளல். அதன் அடிப்படையில் சுன்னத் வல்ஜமாஅத்தைச் சேர்ந்த ஆலிம்களின் உள்ளங்களில் உறைந்து கிடக்கும் சோர்வு என்ற இருளை அகற்றி உணர்வு என்ற ஒளியைப் பாய்ச்ச வேண்டும்.

கல்வி என்பது வேறு. அறிவு என்பது வேறு. மிகப் பயங்கரமான நிலையில் இஸ்லாமிய சமூகம் முழுவதுமே மூலைச்சலவைக்கு ஆளாவதை காணலாம். வஹ்ஹாபிஸம் என்பது (எப்போர்வையில் வந்தாலும்) கண்டிக்கப்பட வேண்டியதல்ல. அடக்கி ஒடுக்கப்பட வேண்டியது. அதற்காக தூங்கிக் கிடக்கும் உங்கள் உணர்வுகளை தட்டிக் கொடுக்கவே இது போன்ற சிறு நூல்கள் உதயமாகின்றன. இன்னொரு இஸ்லாமிய சகோதரர் கையில் கொடுப்பதுடன் எங்களுக்கும் ஒரு வார்த்தை எழுதுங்கள்.

உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களை மனமார வரவேற்கிறோம். விசனங்களையும், கபடத்தனமான பயமுறுத்தல்கலையும், அச்சுறுத்தல்களையும், நயவஞ்சகர்களின் பசப்பான கருத்துக்களையும் நாம் உள்ளன்புடன் ஏற்கிறோம். பாம்பென்ன, விஷமென்ன, இரண்டும் ஒன்றே.

நாம் சத்தியத்தின்பால் இருக்கிறோம். அதன்பக்கமே அழைக்கிறோம். அல்லாஹ்வுக்காக என்பதே எமது மூலதனம். எம்மால் எவ்வித ஊக்க போனஸையும் வழங்க முடியாது. மார்க்கத்தில் பேரம் பேசமாட்டோம். வளைந்து இசைந்து கொடுக்கமாட்டோம். எந்த ஒரு அரசியல்வாதிக்கோ, அல்லது தனவந்தருக்கோ வால்பிடிக்கும்

இஸ்லாமிய பிரச்சாரம் செய்யவும் மாட்டோம். யாருடைய உள்ள-மாவது இதனால் உடைந்து விடுமாயின் அதற்காக வருந்துகிறோம் ஆனால் மன்னிப்புக் கேட்க மாட்டோம். ஏனெனில் சத்தியம் என்றும் ஒன்றே. இரண்டாகாது. இரண்டாகவும் கூடாது.

இச்சிறு நூல், அதன் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், பூரணத்துவமாக அமைந்திருப்பின் அது அல்லாஹ்வின் அருளேயன்றி வேறொன்றுமில்லை. இதில் ஏதும் குறை காணப்படின், அது எனது அறிவின் பலவீனத்தையும், சிந்தனைச் சறுக்கலையும் படம் பிடித்துக் காட்டும்.

தப்பிப் போனோர் தூய வழிக்கு திரும்பிவர வேண்டும் என்பதே எமது துஆ. இச்சிறு முயற்சி நாளை கியாம நாளையில் கண்மணியாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய புனித சிபார்சுக்கு என்னை ஆளாக்க வேண்டும். அவர்களது பொருட்டாலே இப்புனித பணியை அல்லாஹ் கபூல் செய்யவேண்டும் என்று மானசீகமாகப் பிரார்த்தித்து முடிக்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

வஸ்ஸலாம்.

ஆக்கியோன்
முஹம்மது நஸீம்.

30 A, பள்ளி வீதி,
தும்புளவாவை,
ஹெம்மாதகமை,
ஸ்ரீ லங்கா.

1998. 02. 25

நுழைவாயிலில்...

இச்சிறு நூலின் சர்ச்சைக்குரிய கருப்பொருள் என்ன? என்ற தெளிவு வாசகர்களிடம் இருப்பது, நூலின் உள்ளடக்கத்தை புரிந்து கொள்ள வழி வகுக்கும். எனவேதான் நுழைவாயிலில் உங்களை நிறுத்தி உரையாடுகிறேன்.

வஹ்ஹாபிகளின் ஆத்மீக குருக்களில் ஒருவர்தான் இமாம் தகியுத்தீன் அஹ்மத் இப்னு தைமியா அல்-ஹர்ரானி (661 ஹி - 728) எனப்படுபவர். சுருக்கமாக இப்னு தைமியா என அழைக்கப்படுவார் இவர்.

நபி (ஸல்) அவர்களை தரிசிப்பதற்காக புனித மதீனாவுக்கு பயணம் செய்யக் கூடாது. அது மட்டுமல்ல, அது மஹா பாவம். அப்பாவச் செயலில் ஈடுபட்டிருக்கும் ஒரு நபர், தனது பிரயாணத்தின் போது தொழுகையை சுருக்கித் தொழ முடியாது. என்ற கருத்தை முதன் முதலாக கூறினார்.

" الجواب الباهر في زوار المقابر "

இது மிக மோசமான ஒரு கருத்தாகும் என்கிறார்கள், புனித புஹாரி விரிவுரை ஆசிரியர் இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள்

فتح الباري ٣ / ٦٦

அதே கருத்தையே இமாம் அபூ ஸுர்ஆ (ரஹ்) அவர்களும் கூறியுள்ளார்கள்.

طرح التثريب ٦/٤٣

இவரது இந்த நச்சுக் கருத்துக்களுக்கு பதிலளித்து `ஸியாரத்' பற்றிய அனைத்து ஆதாரங்களையும் உள்ளடக்கிய ஒரு ஆய்வு நூலை ஷாபிஈ மத்ஹபின் பிரபல்யமான ஒருவரும், ஹதீஸ் மற்றும் பிக்ஹ் கலையின் சட்டமேதையுமான இமாம் அலி-இப்னு அப்துல் காபி தகிய்யுத்தீன் அஸ்ஸுப்கி (ஹி 683-756) அவர்கள் எழுதினார்கள்.

" شفاء السقام في زيارة خير الانام "

இவரது கருத்துக்களை எதிர்த்து தனதுகுருவின் கருத்துக்களை சரி செய்ய இப்னு தைமியாவின் மாணவராகிய 'முஹம்மத் இப்னு அஹ்மத் இப்னு அப்துல் ஹாதி' என்பவர் ஒரு நூல் எழுதினார்.

" الصارم المتكي في الرد على السبكي "

வழமை போல் தாம் கொண்ட கருத்தை சரி செய்ய மேற் கொள்ளப்பட்ட முயற்சியே தவிர, சத்தியத்துக்கான முயற்சி அல்ல. எனவேதான் இவரும் உண்மைகளை மறைக்கவும், கருத்துக் கையாடல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதையும் நாம் சுட்டிக் காட்டியுள்ளோம். இந்த நூல் சவூதிய அரசினால் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதை கையில் வைத்துக் கொண்டு தான், வஹ்ஹாபிகள் கூக்குரலிடுகின்றனர். ஆனால் இம்மேதை-களுக்குத் தெரியாத பல தகவல்கள் இருக்கின்றன.

மேற் கூறப்பட்ட இப்னு அப்துல் ஹாதி என்பவருக்கு எகிப்தைச் சேர்ந்த அஷ்ஹரிய பேரறிஞர் அல்லாமா அஷ்ஷெய்க் இப்றாஹீம் அஸ்-ஸம் நூவ்திய் அல்-மன்சூரிய் என்பவர் ஹி. 1319ல் தக்க பதிலளித்து விட்டார்.

كتاب نصرة الامام السبكي برد الصارم المتكي

இப்படியொரு விமர்சன நூலை வரலாற்றில் யாரும் காண முடியாது. வெறும் கருத்துக்கள் உடைத்தெறியப்படவில்லை. ஒவ்வொரு வசனமும் கூறப்பட்டு, அது விமர்சிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆலிமிடமும் இருக்க வேண்டிய அறிய நூல் அது. அறிவு என்றால் என்ன? மடமை என்றால் என்ன? என்பது அதைப் பார்க்கும் போது தெரியும்.

மேலும் எகிப்தைச் சேர்ந்த அறிஞர் அஷ்ஷைக் அல்லாமா இப்னு அலான் அஸ்ஸித்தீய்திய் அவர்களும் இப்னு அப்துல் ஹாதிக்கு தக்க பதிலளித்துள்ளார்கள்.

المبرد المبكري في نصرة الامام السبكي

துரதிஷ்டவசமாக இந்நூலை அடைந்து கொள்ள முடியாமல் போயிற்று. மேலும், பலதரப்பட்ட இமாம்கள் இவ்விடயம் பற்றி எழுதியிருப்பினும், இந்தியாவைச் சேர்ந்த இமாம் அபுல் ஹஸனாத் முஹம்மத் அப்துல் ஹய் அல்-லக்னவி (ஹி 1264-1304) என்பவரது ஆக்கங்கள் ஆழமானதும் ஆனித்தரமானதுமாகும்..

அத்துடன் தற்காலத்தில் உலகப் புகழ்பெற்ற அறிஞர் பெருமக்க-ளாலும் இவ்விடயம் ஆராயப்பட்டுள்ளது. அதன் வரிசையில் பின்வருவோரை குறிப்பிடலாம்.

1. அஷ்-ஷைக் முஹம்மத் இப்னு அஸ்-ஸையித் அலவி அல் மாலிக்கி (மக்கா ஷரீப்)

شفاء الفؤاد بزيارة خير العباد

2. அஷ்-ஷைக் முஹம்மத் ஸகி இப்றாஹீம் (எகிப்து)

الافهام والافحام أو قضايا الوسيلة والقبور في ضوء سماحة الاسلام

3. அஷ்-ஷைக் மஹ்மூத் ஸயீத் மம்தூஹ்

١. الاعلام باستحباب شد الرحل لزيارة قبر خير الانام عليه الصلاة والسلام

٢. رفع المنارة في تخريج احاديث العوسل والزيارة

இந்நூல் நடையை அனுசரனையாகக் கொண்டே, எனது ஆக்கங்களை வகுத்துள்ளேன்.

இங்கு சர்ச்சைக்குரிய விடயங்ளை வாசகர்களுக்க தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

1. முஸ்லிம்களின் கப்ருகளை தரிசிக்கச் செல்வது சுன்னத்தான அமலாகும், என்பதில் கருத்து வேறுபாடில்லை. என்றாலும் கபுரு வணக்கம், தர்காவழிபாடு என்ற வஹ்ஹாபிகளின் வசை பாடலால், கப்ருகளை ஸியாரத் செய்வது ஒரு மஹா சிர்க்கான செயல்போல், பொது மக்களிடம் ஒரு பிரமை ஏற்பட்டுள்ளது. ஆக அவ்வாறு தரிசிப்பது சுன்னத்தான அமல் என்பதை நிருபித்துள்ளோம்.

2. அவ்வாறு சுன்னத்தான ஸியாரத்துக்காக பிரயாணம் செய்யக் கூடாது. கொள்ளுப்பிட்டியில் வசிக்கும் ஒருவர், குப்பியா-வத்தையில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. தனது தகப்பனாரின் கப்ரை ஸியாரத் செய்ய முடியாது. ஏனெனில், அவர் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது. என்பது வஹ்ஹாபிகளின் குருட்டு வாதம். சாப்பிட அனுமதியுண்டு. ஆனால் வாயைத்திறக்கக் கூடாது. பன்றி இறைச்சி கூடாது. ஆனால் கறிக்குழம்பு கூடும். என்று கூறும் நூதனமான கருத்துக்களை என்னவென்று கூறுவது !!!

எனவே, ஸியாரத் என்பது பயணத்துடனும் அமையலாம். பயணமின்றியும் அமையலாம். இல்லையேல் ஒவ்வொருவரும் தமது உறவினர்களை வீட்டிலே நல்லடக்கம் செய்து கொள்ள வேண்டி ஏற்படும். ஆக ஸியாரத் எனும் அமல் நிறைவேற அவசியமான அனைத்து அம்சங்களும் சுன்னத்தான வணக்கங்களே என்பதை ஹதீஸ்களின் நிழல்களில் தெளிவு-படுத்தியுள்ளோம்.

3. இதன் அடிப்படையில் மக்காவிலிருந்து ஹாஜிகள் மதீனாவை நோக்கி நபியவர்களை தரிசிக்ககச் செல்லக் கூடாது. அப்பயணம் மஹா பாவமானது. அப்பயணத்தில் தொழுகையை சுருக்கித் தொழ முடியாது. என்பதே வஹ்ஹாபிகளின் வாதம்.

கூற்று 1ல் முஸ்லிம்களின் கபுருகளை தரிசிக்கச் செல்வது சுன்னத்தான அமலாகும். என்று ஏற்றுக் கொண்ட வஹ்ஹாபிகள் கண்மணி (ஸல்) அவர்களை முஸ்லிமாக ஏற்றுக்கொள்ள வில்லையோ? தெரியவில்லை.

மேலும் கூற்று 2ல் குறிப்பிட்டபடி ஸியாரத் என்பதற்கு பயணம் அவசியமாயின் அதுவும் சுன்னத்தான அமலே. அதற்கு வரையறையிட யாருக்கும் அதிகாரம் கிடையாது. மதீனாவுக்கும் செல்லலாம்., மொஸ்கோவுக்கும் செல்லலாம். மக்காவுக்கும் செல்லலாம், மெக்ஸிகோவுக்கும் செல்லலாம். உலகின் எத்திக்குக்காவது சரி, யாரும் புறப்பட்டுச் செல்லலாம். அனைத்தும் சுன்னத்தான அமல்களே என்பதை தெளிவு படுத்தியுள்ளோம்.

4. ஆயிரம்தான் இருந்தாலும், உலகின் கோடானகோடி நெஞ்சங்களை ரியால் மோகத்தால் மாற்றமுடியவில்லை. மதீனாவுக்கு போகக் கூடாது என்று தடுக்க திராணியும் இல்லை. எனவேதான் மதீனா

பள்ளிவாயலில் தொழுவதற்காக அங்கு செல்லுமாறும், நபி (ஸல்) அவர்களை ஸியாரத் செய்யும் நிய்யத்தில் செல்ல வேண்டாம், என்றும் ஹஜ் இலவச வழிகாட்டி பிரசுரங்களில் காணலாம்.

இங்கு ஒரு விடயத்தை கவனிக்கவும். நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

எனது பள்ளிவாயலில் (மதீனா) தொழுவது ஏனைய பள்ளி வாயல்களில் தொழுவதை விட ஆயிரம் தொழுகையளவு மேலானது. ஆனால் ஹரம் ஷரீபில் (மக்கா) தொழுவது ஒரு இலட்சம் தொழுகையை விடச் சிறந்தது.

صحيح مسلم ٣ / ٥٣٧ (٤٧٢)

மக்காவில் தொழுவது ஒரு இலட்சம் தொழுகையளவு சிறப்பானது. ஆனால், பல சிரமங்களை சுமந்து மதீனாவுக்கு சென்று தொழுதால் ஆயிரம் தொழுகைக்கே சமனாகும். இந்த நிலையில் எந்த ஒரு புத்தியுள்ள மனிதனாவது (வஹ்ஹாபிகள் தவிர) ஒரு இலட்சத்தை விட்டு ஆயிரத்துக்காக பிரயாணம் செய்வானா?
இது ஒன்றே போதும் அவர்களின் கோபமும் அடங்க.

5. நபி (ஸல்) அவர்களை தரிசிக்கச் செல்வதின் சிறப்புப் பற்றி கூறும் அனைத்து ஹதீஸ்களும் பலயீனமானது. இட்டுக் கட்டப்பட்டது என்பது அவர்களின் வாதம்.

பலயீனமான ஹதீஸ் என்பதன் கருத்து அது பொய்யானது என்ற அர்த்தமல்ல. அடுத்தது பலயீனமானதுக்கும், இட்டுக்கட்டப்-பட்டதற்கும் பாரிய வித்தியாசமுண்டு. ஆக, வாசகர்கள் எமது வகைப்படுத்தலை உற்று நோக்கின், வஹ்ஹாபிகள், கண்மணி (ஸல்) அவர்கள்மீது கொண்ட வக்கிர வெறுப்பை அவதானிக்-கலாம். இதுவே, யூத, கிருஸ்துவ, சியோனிஸ அமைப்புக்களின் முழு முயற்சியும். முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் முஹம்ம-தியர்களுக்குமடையில் ஒரு பாரிய இடைவெளியை ஏற்படுத்தி விடுவது. அதில் வஹ்ஹாபிஸப் போர்வையில் சாதித்த பெருமை அவர்களையே சேரும்.

இங்கும், ஒரு சில ஹதீஸ்கள் பலயீனமானதாக காணப்படினும், பலமான ஹதீஸ்களும், அல்-குர்ஆனின் திருவசனங்களும், நபி

(ஸல்) அவர்களை சென்று தரிசிப்பதின் சிறப்பை வலிறுருத்-துவதை ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளோம்.

இப்போது, நீங்கள் உள்ளே செல்லலாம். நிதானமாக வாசியுங்கள். அல்லாஹ் சத்தியத்தை அறிந்து அதன்படி எடுத்து நடக்கவும், அசத்தியத்தை அறிந்து அதனை தவிர்ந்து நடக்கவும் அருள் புரிவானாக, கண்மணியாம் நபி (ஸல்) அவர்கள் பொருட்டால் எமது பிரார்த்தனைகளை வல்லவன் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக.

நபி (ஸல்) அவர்களின் புனித கப்ரை தரிசிக்கச் செல்வதற்கான ஆதாரங்கள்.

நபியவர்களை தரிசிக்கச் செல்வது இஸ்லாத்தில் விரும்பப்பட்ட சுன்னத்தான ஒரு செயலாகும். மேலும் ழாஹிரிய்யாகளிடமும், மாலிக், ஹனபி மத்ஹபுகளைச் சேர்ந்த சில இமாம்களிடம் அது பர்ளுக்கு சமனான அமலாக கருதப்படும்.

இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :-

(நபியவர்களை தரிசிக்கச் செல்வது, வணக்கங்களில் மிகச் சிறந்ததும், முயற்சிகளில் மிக வெற்றியூட்டக் கூடியதுமாகும், ஹஜ்ஜுடைய அல்லது உம்ராவுடைய கடமைகளை நிறைவேற்றி-யோர், புனித மதீனாவை நோக்கி புறப்படுவது மிக முக்கிய கருமமாகும். அவ்வாறு புறப்படுவோர், அப்பயணத்தின் மூலம் இறை அருளையும், நபியவர்களின் தரிசனத்தையும், அங்கு தொழுவதையும் நிய்யத்து வைப்பார்.)

المجموع ٨ /٢٠٤

இமாம் அபூ முஹம்மத் இப்னு குதாமா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :-

ஹஜ்ஜுடைய கடமைகளை நிறைவேற்றிய பின் நபியவர்களையும் அவர்களது இரு தோழர்களையும் ஸியாரத் செய்வது விரும்பப்பட்ட விடயமாகும்.

المغني ٣ / ٥٨٨ – الانصاف ٤ / ٥٣

இதுவே எல்லா மத்ஹபுகளையும் சேர்ந்த இமாம்களின் கருத்தாக உள்ளது. இப்போது அவர்கள், எதன் அடிப்படையில் இப்படிக் கூறினார்கள் என்று ஆராய்வோம்.

முதலாவது :

ولو انهم اذ ظلموا انفسهم جاءوك فاستغفروا الله واستغفر لهم الرسول لوجدوا الله توابا رحيما (النساء : ٦٤)

இன்னும் நிச்சயமாக அவர்கள் தமக்குத்தாமே அநீதமிழைத்துக் கொண்டு, உம்மிடம் வந்து. பின்னர், அல்லாஹ்விடம் அவர்கள் பாவமன்னிப்புக்கோரி, அவர்களுக்காக (அல்லாஹ்வுடைய) தூத (ராகிய நீ)ரும் பாவமன்னிப்புக் கோரியிருந்தால், தவ்பாவை ஏற்(று மன்னிப்)பவனாக, மிகக் கிருபையடையோனாக அல்லாஹ்வை அவர்கள் கண்டிருப்பார்கள்.

(அன்னிஸா 64)

இத்திருவசனத்தில் جاءوك வருதல் என்ற சொற்றொடர் لو எனப்படும் நிபந்தனையுடன் கூறப்பட்டிருப்பதால், அது எல்லா நிலமைகளையும் பொதுவாக குறிக்கும். நபியவர்களின் இவ் வாழ்க்கையின் போது வருதல் என்று மாத்திரம் குறிப்பிடாது. அரபு இலக்கணத்தில் நிபந்னைக்கான குறியீடுகளுக்குப் பின், வரும் வினைகள்தான் மிகவும் பொதுக்கருத்தை வலியுறுத்தும் என்பதை கவனத்தில் கொள்க.

ارشاد الفحول ١٢٢

இதன் பொதுக் கருத்துப்படவே அல்-குர்ஆனின் விரிவுரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர். அந்த ரீதியில் இறை மன்னிப்பையும், அருளையும் அடைய அல்-குர்ஆன் மூன்று விடயங்களை குறிப்பிடுகிறது.

1. நபி (ஸல்) அவர்களிடம் வருதல்
2. மன்னிப்புக் கோருதல்
3. நபியவர்கள், அவர்களுக்காக மன்னிப்புக் கோருதல்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் மு.்.மீன்களுக்காக, பாவமன்னிப்புத் தேடியதை பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகிறகு.

واستغفر لذنبك وللمؤمنين وللمؤمنات (محمد : ١٩)

உம்முடைய பாவத்துக்காகவும். விசுவாசம் கொண்ட ஆண்களுக்காகவும் விசுவாசம் கொண்ட பெண்களுக்காகவும் பாவமன்னிப்புக் கோருங்கள்.

சூரா நிஸாவின் 64ம் வசனத்துக்கு விரிவுரை எழதும் போது இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

அதபி என்பவர் கூறுகிறார்கள். நாம் நபி (ஸல்) அவர்களின் புனித கப்ருக்கு பக்கமாக அமர்ந்திருந்த போது ஒரு நாட்டுப்புற அரபி வந்து பின்வருமாறு கூறினார்கள் :-

உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தி உண்டாவதாக. அல்லாஹ் சொல்ல நாம் பின்வருமாறு கேட்டுள்ளோம்.

ولو انـــهم اذ ظلموا انفسهم جاءوك فاستغفروا الله واستغفر لـــهم الرسول

لوجدوا الله توابا رحيما (النساء : ٦٤)

எனவே எனது பாவங்களுக்கு மன்னிப்புக் கோரியவனாகவும். அதற்காக நீங்களும் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்கவும் நான் இங்கு வந்துள்ளேன்.

பின்பு அந்த நாட்டுபற்று அரபி பின்வருமாறு பாடலானார்.

يا خير من دفـــنت بالقاع اعـــظمه فطاب مـــن طيبهن القاع والاكـــم

نفسي الفداء لقبر انت ساكنه فيه العفاف وفيه الجود والكرم

பின்பு அம்மனிதர் சென்று விட்டார். எனக்கு (அதபி) தூக்கம் ஏற்பட்டது. கனவில் தோன்றிய நபி (ஸல்) அவர்கள் எனக்கு கூறினார்கள் (அதபியே! அம்மனிதரை சந்தித்து அல்லாஹ், அவரது பாவங்களை மன்னித்ததாக நற்செய்தி கூறுவீராக.)

ஐயம்:- சவுதி அரேபியாவை சேர்ந்த அஷை-ஷைய்க் முஹம்மத் இப்னு ஸாலிஹ் அல்-உஸய்மின் என்பவர் பின்வருமாரு கூறுகிறார்.

இந்த ஆயத்தின் பிரகாரம் எபிபாரத் செய்வதற்கான ஆதாரமாக கொள்ள முடியாது. இந்த ஆயத்தில், இறந்த காலங்களுக்கு உபயோகிக்கப்படும். (إذ) என்ற இடைச் சொல்லே வந்துள்ளது. அது எதிர்காலத்தை குறிக்காது. அதன் பிரகாரம் நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்வின்போது மு.்.மீன்களுக்காக பாவமன்னிப்புக் கோரினார்கள். ஆனால், அவர்களது வபாத்துக்கு பின்பு அவ்வாறு செய்ய முடியாது. தனக்கோ, அல்லது பிறருக்காவோ பாவமன்னிப்புக் கோர அவரால் முடியாது. (நிரந்தர ஸதகா, பிரயோசனமிகு அறிவு, சீரான ஒரு குழந்தை) இம்மூன்றை தவிர மனிதனின் சகல வணக்க வழிபாடுகளும் அவனது வபாத்துடன் ஸ்தம்பித்து விடும் என ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளது.

فتاوى مهمة لعموم الامة ٣ / ١٠٠

தெளிவு :-

மேற்படி ஆயத்தில் கூறப்பட்ட விடயங்களை இரு கூற்றுக்களாக வகைப்படுத்தி ஆராய்வோம்.

கூற்று 1 (إذ) எனும் இடைச்சொல் இறந்த காலத்துக்கு மட்டுமே பாவிக்கப்படும். எதிர்காலத்தை குறிக்க மாட்டாது.

பதில் 1 மேற்கூறப்பட்ட அவரது கூற்றை அலசும் போது, அரபு இலக்கண இலக்கியத் துறைகளில் அவரது திறமை எந்த அளவு இருக்கிறது என்பது தெளிவாகும்.

(அ) (إذ) எனும் இடைச்சொல் இறந்த காலத்துக்கு பாவிக்கப்படுவது போல், எதிர்காலத்துக்கும் பாவிக்கப்படும். மேலும் பல கருத்துக்கள் அப்பதத்துக்கு உண்டு என இமாம் இப்னு ஹிஷாம் அவர்கள் கூறுகிறார்கள்.

مغني اللبيب ١ / ٨٠ - ٨٢

(ஆ) (إذ) எனும் இடைச்சொல் இறந்த காலத்துக்குப் போல், எதிர்காலத்துக்கும் பாவிக்கப்படும். (إذا) எனும் இடைச்

சொல் எதிர் காலத்துக்குப் போல், இறந்த காலத்துக்கும் பாவிக்கப்படும் என இமாம் அல்-அஸ்ஹரி அவர்கள் கூறிப்பிடுகிறார்கள்.

تهذيب اللغة ١٥ / ٤٧

(இ)

ولو ترى اذ فزعوا فلا فوت وأخذوا من مكان قريب (سبأ : ٥١)

இன்னும் (மறுமையில் காபிர்களான) அவர்கள், திடுக்க முற்றிருக்கும் பொழுது நீர் காண்பீராயின், அப்போது (அவர்கள் எங்கும்) தப்பிச் செல்ல முடியாது. மிகச் சமீபமான இடத்திலிருந்து அவர்கள் பிடிக்கப்பட்டும் விடுவார்கள். (ஸபஉ 34.)

இந்த ஆயத்தில் (اذ) எனும் இடைச் சொல் எதிர் காலத்துக்கு பாவிக்கப்பட்டுள்ளதை காணலாம்.

(ஈ)

ولو ترى اذ وقفواعلى النار فقالوا يليتنا نرد ولا نكذب بآيات ربنا ونكون من المؤمنين . (الانعام : ٢٧)

(நரக) நெருப்பின் மீது அவர்கள் நிறுத்தப்படும் பொழுது (நபியே) நீர் (அவர்களைப்) பார்ப்பீராயின், நாங்கள் (உலகத்திற்குத்) திரும்ப அனுபப்படவேண்டுமே. (அல் அன்ஆம் 27.)

இந்த வசனத்திலும் (اذ) இடைச் சொல், எதிர் காலத்துக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது.

(உ)

ولو ترى اذ الظلمون في غمرات الموت .. (الانعام : ٩٣)

இன்னும் இவ்வநியாயக்காரர்கள் மரமண வேதனையிலிருந்தும் சமயத்தில் நீர் அவர்களைப் பார்ப்பீராயின்... (அல் அன்ஆம் 93)

இத்திரு வசனத்திலும் (اذ) இடைச்சொல் எதிர் காலத்துக்கு பாவிக்கப்பட்டுள்ளது.

(ஊ)

ولو ترى اذ المجرمون ناكسوا رؤوسهم عند ربهم .. (السجدة : ١٢)

மேலும், இக்குற்றவாளிகள் தங்கள் இரட்சகனிடத்தில் அவர்கள் தலை குனிந்தவர்களாக ...... (அஸ் ஸஜ்தா 12.)

இவ்வசனத்திலும் (اذ) எனும் இடைச்சொல், எதிர்காலத்தை சுட்டிக்காட்ட பிரயோகிக்கப்பட்டுள்ளது.

ஆக, மேற்குறிப்பிட்ட அனைத்து வசனங்களிலிருந்தும் அஷ்ஷைக் உஸய்மின் அவர்களது கூற்று பொய்யானது என்று அம்பலமாகிறது. இப்போது அவரது இரண்டாவது கூற்றை ஆய்வோம்.

கூற்று 2 மரணத்துக்குப்பின் மூன்று விடயங்களைத் தவிர எந்த அமலும் செய்யமுடியாது. நபி (ஸல்) அவர்கள் தனக்கோ அல்லது பிறருக்காகவோ பாவமன்னிப்புக் கோரும் தகமை கிடையாது.

பதில் 2 நபி (ஸல்) அவர்களுக்கு பாவமன்னிப்புக் கோரும் தன்மையும், சக்தியும் வபாத்துக்கு முன்பும் பின்பும் அல்லது இவ்வாழ்விலும் கப்ருடைய வாழ்விலும் உண்மை என்பதை இப்போது ஆய்வோம்.

(அ) நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் (நபிமார்கள் தமது மன்னறைகளில் ஹயாத்தானவர்களாக தொழுது கொண்டிருக்கிறாகள்)

البيهقي في حياة الانبياء ١٠

ابو يعلى في مسنده ١٤٧/٦

ابو نعيم في اخبار اصبهان .

இமாம் ஹய்ஸமி குறிப்பிடுகிறார்கள். அபூ யஃலாவின் ரிவாயத்தில் இடம் பெருவோர் அனைவரும் உறுதியானவர்களே. மேலும் இதற்கு வேறு பல ரிவாயத்துக்களும் உண்டு.

Scanned by CamScanner

المجموع ٨ / ٢١١

(ஆ) விண்வெளி யாத்திரையைப் பற்றி குறிப்பிடுகையில் நபியாா்கள் கூறினாா்கள். (மூஸா தனது மண்ணறையில் நின்று தொழுது கொண்டிருக்கும் போது, நான் அவருக்கு சமீபமாகச் சென்றேன்

صحيح مسلم ٤/ ١٨٤٥ مسند احمد ١٢/٣ شرح السنة للبغوي ٣٥١/١٣

(இ) 'இஸ்ரா பயணத்தின் போது நபி (ஸல்) அவர்கள் நபிமாா்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடாத்தினாா்கள். மேலும், மூஸா (அலை) 50 ரகஅத்துக்களாக கடமையாக்கப்பட்ட தொழுகையை குறைத்துக் கொள்ளும்படி பலமுறை ஆலோசனை கூறினாா்கள். அத்துடன் மேலும் சில நபிமாா்களை வின்னுலகப் பயணத்தின் போது சந்தித்தாா்கள். இச்சம்பவங்கள், கருத்து வேறுபாடின்றி ஆதாரபூா்வமனவை. என்றால், வபாத்தான நபிமாா்களுக்கு எப்படி தொழமுடியும்? அவ்வாறு தொழ முடியுமென்றால், பாவமன்னிப்புக் கோருவதும் முடியுமான காரியமே.

(ஈ) நபி (ஸல்) அவர்கள் கூறினாா்கள்.

எனது வாழ்வு உங்களுக்கு சிறந்தது. உங்களுக்கு (பிரச்சினைக்குரியவற்றை) கேட்டு அறிந்து கொள்வீா்கள். எனது வாபத்தும் உங்களுக்கு சிறந்தது. உங்களுடைய கிரியைகள் எனக்கு காண்பிக்கப்படும். அதில் நல்லவற்றை கண்டால் அல்லாஹ்வை புகழ்வேன். தீயவற்றை கண்டால் உங்களுக்காக பாவனமன்னிப்புக் கோருவேன்.

طرح التثريب للعراقي ٢٩٧/٣

مجمع الزوائد ٢٤/٩

الخصائص الكبرى للسيوطي ٢٨١/٢

السراج المنير شرح الجامع الصغير ٢١٧/٢ .

இது சஹீஹான ஹதீஸ் ஆகும்.

ஹாபில் இராகி அவர்கள். இதனுடைய இஸ்னாத் நல்லது என்கிறார்கள், இமாம் ஹய்ஸமி அவர்கள், இதனுடைய ராவிகள் புஹாரி சரீபில் இடம் பெறுவோர் என்று குறிப்பிட்டுள்ளார்கள். மேற்கூறப்பட்ட இரு இமாம்களுடைய கருத்துக்களும் பஸ்ஸார் உடைய ரிவாயத் பற்றியதே. இல்லையென்றால், ஏனைய ரிவாயத்துக்களின் படி இது ஸஹீஹான ஹதீஸே என்பதை இமாம் சுயூதி (ரஹ்) அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

الخصائص الكبرى ٢/٢٨١

(உ) நபியவர்களின் வாழ்விலும், அதற்குப் பின்பும் அவர்களை விசுவாசம் கொண்ட, அனைத்து ஆண் பெண்களும் அவர்களின் பாவமன்னிப்புக்கு ஆளாகிறார்கள், என்பதை அல்-குர்ஆனின் (சூரா முஹம்மத் 19) வசனம் பறைசாற்றுகிறது.

(ஊ) வஹ்ஹாபிகளின் ஆத்மீக கருக்களில் ஒருவராகிய இப்னு கையும் அவர்கள், மரணத்துக்குப் பின் நபிமார்களின் வாழ்வைப்பற்றி பின்வரும் பாடல் மூலம் குறிப்பிடுகிறார்கள்.

والرسل أكمل حاله منه بلا ... شك وهذا ظاهر التبيان

فلذلك كانوا بالحياة احق من ... شهدائنا بالعقل والبرهان

وبأن عقد نكاحه لم ينفسخ ... فنساؤه في عصمة وصيان

ولأجل هذا لم يحل لغيره ... منهن واحدة مدى الازمان

أفليس في هذا دليل أنه ... حي لمن كانت له أذنان

النونية على شرح ابن عيسى ٢ / ١٦٠

பொருள் :

நபிமார்கள் சந்தேகமின்றி பரிபூரணமானவர்கள். எனவேதான், சுஹதாக்களைவிட அவர்கள் உயிர் வாழ்வது மிகப் பொருத்தமானது, என்பது புத்திக்கும் ஆதாரங்களுக்கு மத்தியிலும் தெளிவாகிறது. மேலும், அவர்களது திருமனங்கள் முறிவதுமில்லை, அவரது இல்லத்

தூசிகளை மனக்க எவருக்கும் உரிமை கிடையாது. இவைகள் அனைத்தும் நபிமார்கள் உயிர் வாழ்வார்கள். என்பதற்கு, புத்தியுடையோர்க்கு ஆதாரமாக வில்லையா?

மேற்கூறப்பட்ட விடயங்களிலிருந்து கூற்று 2ல் கூறப்பட்ட கருத்து தப்பானது மட்டுமல்ல, அல்-குர்ஆனைப் பற்றியும், சுன்னாவைப் பற்றியும் ஆரம்ப அறிவு கூட அற்ற ஆறு வயதுப் பையனின் குருட்டு, விவாதமாய் உள்ளது.

ஆக, சூரா நிஸாவின் 64 வசனத்தின் தெளிவான போதனையின்படி மூன்று விடயங்கள் நிறைவேற வேண்டியுள்ளது.

1. **நபி (ஸல்) அவர்களிடம் செல்லல்.**
2. **அங்கு அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரல்.**
3. **அவர்களுக்காக, நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்விலும், வாழ்விற்குப் பின்பும் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரல்.**

ஒரு குறிப்பிட்ட சம்பவத்தில், இந்த வசனம் இறங்கியது எனக் கூறமுடியாது. ஏனெனில் சரீஆவின் மூலாதாரங்களில் கூறப்படும் விடயங்கள் பொதுப்படையாக சான்றாகக் கொள்ளப்படுமே தவிர, அச்சட்டங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக ஓதுக்கப்படமாட்டது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவேதான், விரிவுரையாளர்யர்கள், இவ்வசனத்துக்கு பொதுப்படையான சட்டத்தை வழங்கியது மட்டுமல்ல, புனித ஸியாரத்துக்காக மதீனாவுக்கு வரும் போது, இவ்வசனத்தை ஓதுவதையும் ஒரு விரும்பப்பட்ட செயலாக கருதுகிறார்கள். இதன் அடிப்படையில்தான், அனைத்து முபஸ்ஸிரீன்களும், சட்டமேதைகளும் இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டார்கள்.

இமாம் இப்னு குதாமா (ரஹ்) அவர்கள், ஸியாரத் செய்யும் முறை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்.

பின்பு புனித கப்ர் பக்கமாய் வந்து, கிப்லாவுக்கு புறம் காட்டி, புனித கப்ரை முன்னோக்கி பின்வருமாறு கூற வேண்டும்.

السلام عليك ايها النبي ورحمة الله وبركاته ، السلام عليك يا نبي اللــه وخيرته من خلقه ، اشهد ان لااله الا الله وحده لا شريك له ، واشــهد

ان محمدا عبده ورسوله ، اشهد انك بلغت رسالات ربك ، ونصحت لامتك ، ودعوت الى سبيل ربك بالحكمة والموعظة الحسنة ، وعبدت الله حتى اتاك اليقين ، فصلى الله عليك كثيرا كما يحب ربنا ويرضى اللّهم اجزه عنا نبينا أفضل ما جزيت أحدا من النبيين والمرسلين ، وابعثه المقام المحمود الذي وعدته يغبطه به الاولون والآخرون ، اللّهم صل على محمد وعلى آل محمد كما صليت على ابراهيم و آل ابراهيم انك حميد مجيد ، اللّهم انك قلت وقولك الحق (ولو انهم اذ ظلموا انفسهم جاءوك فاستغفروا الله واستغفر لهم الرسول لوجدوا الله توابا رحيما) وقد اتيتك مستغفرا من ذنوبي مستشفعا بك الى ربي فأسألك يا رب ان توجب لي المغفرة كما اوجبتها لمن اتاه في حياته ، اللهم اجعله أول الشافعين ، وأنجح السائلين وأكرم الآخرين والاولين ، برحمتك يا ارحم الراحمين ، ثم يدعو لوالديه ولإخوانه وللمسلمين اجمعين ، ثم يتقدم قليلا ويقول : السلام عليك يا ابا بكر الصديق السلام عليك يا عمر الفاروق ، السلام عليكما يا صاحبي رسول الله صلى الله عليه وسلم وضجيعيه ووزيريه ورحمة الله وبركاته ، اللهم اجزهما عن نبيهما وعن الاسلام خيرا ، سلام عليكم بما صبرتم فنعم عقبى الدار ، اللهم لا

تجعله آخر العهد من قبر نبيك صلى الله عليه وسلم ، ومن حرم مسجدك يا ارحم الراحمين .

المغني ٣٠ / ٥٩٠

இமாம் இப்னு குதாமா (ரஹ்) ஹன்பலி மத்ஹபின் பிரபல்யமான மேதை, அவரைப் பற்றி இமாம் இப்னு தைமியா பின்வருமாறு கூறுகிறார் :-

அவ்ஸாஈக்கு பின் சாம் தேசத்துக்கு, இப்னு குதாமாவை விடச் சிறந்த மேதையொருவர் வரவில்லை.

ஆக, அல் குர்ஆனின் நேரிய வழிகாட்டலில் வஹ்ஹாபிகளின் அனைத்துக் கருத்துக்களும் தவிடு பொடியாகி விட்டதை காணலாம்.

இப்போது, புனித சுன்ன சரீபில் ஸியாரத் பற்றிய ஹதீஸ்களை விபரமாக ஆராய்வோம்.

இரண்டாவது : புனித சுன்னா

இதை இரு கோணங்களில் நோக்கலாம்

1. பொதுவாக கப்ருகள் தரிசித்தல்
2. நபி (ஸல்) அவர்களின் புனித கப்ரை தரிசித்தல்

ஸியாரதுல் குபூர் எனப்படும் கப்ருகளை தரிசித்தல்

கப்ருகளை தரிசித்தல் பற்றிய ஹதீஸ்களின் அளவு தவாதுர் எனும் அளவை அடைந்துவிட்டது.

تواتــر என்றால் பொய் நிகழ்ந்திட சாத்தியமற்ற அளவுக்கு பெருவாரியான கூட்டத்தினர்கள் ஒவ்வொரு படித்தரத்திலும் காணப்படுதல். அவ்வாறான ஹதீஸ்கள் சுன்னாவின் சிறு பகுதியையே பிரதிபலிக்கிறது.

அதன் தொடரில் பின்வரும் ஹதீஸ்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

(அ) கபுருகளை ஸியாரத் செய்வதை நான் தடுத்திருந்தேன். இப்போது அதை தரிசியுங்கள். ஏனெனில் அச்செயல், கியாமத் நாளை உங்களுக்கு ஞாபகமூட்டும்.

صحيح مسلم ٧٢٢/٢

مسند الامام أحمد ٣٥٥/٥

والطحاوي ٢٨٠/٤

ஒரு கருமம் தடுக்கப்பட்டு, பின்பு அது ஆகுமாக்கப்பட்டால் அது வெறும் முபாஹ் எனப்படும் ஆகுமாக்கப்பட்டவைகள் வரிசையில் அடங்கும். ஆனால் அவ்வாறு ஆகுமாக்கப்பட்டதற்காக காரணமும் தரப்பட்டால் அது சுன்னத்தான அமலாகும் என்பது அடிப்படை விதியாகும். இங்கு அந்தக் காரணம் விபரிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கபுருகளை தரிசிப்பது சுன்னத்தான அமல் என்று தெளிவாகிறது.

இங்கு ஒரு விடயத்தை கருத்தில் கொள்ளவேண்டும். இந்த ஹதீஸின் சட்டம் ஆண், பெண் இரு சாராரையும் குறிக்கும். பொதுவாக அதே நடைமுறையைத்தான் குர்ஆனும் கையாளுகிறது. ஆக, ஆண் பெண் இருவரும் ஸியாரத் செய்யலாம். வேறு சில ஹதீஸ்களில் ஸியாரத் செய்யும் பெண்களை கண்டித்து வந்துள்ளதே என்று யாரும் கேட்கலாம். இங்கு நாம் கூறிய ஹதீஸ் முன் கூறப்பட்டுள்ள ஏனைய ஹதீஸ்களின் சட்டங்களை மாற்றி விட்டது. என்கிறார்கள் இமாம் திர்மிதி. அந்த ஹதீஸ்களில் புரயோகிக்கப்பட்டுள்ள வார்த்தைகள் அடிக்கடி ஸியாரத்துக்குப் போகும் பெண்களையே சுட்டிக் காட்டுகிறது. அதனால் ஆண் பெண் கலப்பு ஏற்பட்டு, பாவ காரியங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புண்டு. அவ்வாறான பெணகளையே நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். ஆனால் பொதுவாக பெண்களை தடுக்கவில்லை என்கிறார்கள் கலாநிதி யூசுப்-அல் கர்ழாவி அவர்கள்.

كيف نتعامل مع السنة النبوية معالم وضوابط ، ص ١١٠

(ஆ) யார் கபுருகளை தரிசிக்க விரும்புவார்களோ அவர்கள் அவ்வாறு செய்யட்டும். ஆனால் பாவமான அருவறுக்கத்தக்க வார்த்தைகளை பேசாதீர்கள்.

سنن النسائي ٧٣/٤

இந்த ஹதீஸ் பொதுவான கருத்துடையது. மேலும், நிபந்தனை தொடரில் வந்திருப்பது அதன் பொதுக் கருத்தை வற்புறுத்துகிறது. ஸியாரத் பயணமூலமாகவும், பயணமின்றியும் நடக்கலாம். தரிசித்தல் என்ற பதமும், ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்துக்கு இடம் பெயர்வதை குறிக்கும். அவ்வாறு இடம் பெயறாமல் தரிசிக்க முடியாது.

இதன் அடிப்படையில், ஸியாரத்துக்காக பயணம் செய்வது கூடாது என விவாதிக்கமுடியாது. அதை தடைசெய்ய தனி ஆதாரம் தேவைப்படுகிறது. மேற்கூறப்பட்ட ஹதீஸ் பொதுக் கருத்தை வலியுறுத்துகிறது. அதில் பிரயாணமற்ற ஸியாரத், பிரயாணத்துடனான ஸியாரத் எனப் பிரிக்க யாருக்கும் எவ்வித ஆதாரமுமில்லை.

ஒரு கடமையான கருமம் நிறைவேற அவசியமான துணைக் கருமங்கள் யாவும் கடமையானதே என்பது அடிப்படை விதிகளில் ஒன்று. ஸியாரத் எனும் சுன்னத்தான அமல் நிறைவேற பயணம் தேவைப்படின் அதுவும் சுன்னத்தான அமலே. ஸியாரத் செய்யலாம், ஆனால் பிரயாணம் செய்யக்கூடாது என்பது புத்திக்குப் பொருந்தாத விவாதமாகும். இது பன்றி இறைச்சி கூடாது, ஆனால் கறிக்குழம்பு ஆகும் என்ற **P. J.** யின் விசித்திர பத்வாவுக்கு ஒப்பானது. முழங்காலுக்கும் மொட்டைத்தலைக்கும் முடிச்சுப் போடலாகாது.

ஷரீஅத்தின் பார்வையில் பிரயானத்தை ஸியாரத் என பொருள் கொடுக்கப்படும், என்பதை பின்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

(ஒரு மனிதன் பக்கத்து கிராமத்தில் வசிக்கும் தனது தோழரை தரிசிக்கச் சென்றார். அல்லாஹ் அவரது வழியில் வானவர் ஒரு வரை அனுப்பி வைத்தான். அவரோ, எங்கு செல்கிறீர்? எனக் கேட்க தனது தோழரை தரிசிக்கச் செல்வதாகக் கூறினார். அவரிடம் நிறைவேற வேண்டிய தேவைகள் ஏதுமுண்டா? என வினவ, அப்படியொன்றுமில்லை, அவரை அல்லாஹ்வுக்காக நேசிக்கிறேன் என்றார். உடனே, அவ்வானவர் நான் அல்லாஹ்வின் தூதுவன். நீர்

எவ்வாறு உமது சகோதரனை அல்லாஹ்வுக்காக நேசிக்கிறீரோ அவ்வாறே அல்லாஹ்வும் உம்மை நேசிக்கிறான் என்றார்கள்.

صحيح مسلم ٤ / ١٩٨٨

இந்த ஹதீஸில் 'பிரயாணத்தை' 'ஸியாரத்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'தரிசித்தல்' எனும் பதம் பிரயாணத்தையும் குறிக்கும்.. பிரயாணமின்மையையும் குறிக்கும். அப்படியிருக்கும் போது, இந்த ஹதீஸ்கள் வெறும் ஸியாரத் பற்றி அறிவிக்கிறதே தவிர, பயணத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. பயணம் செய்யவும் கூடாது என்று தர்க்கிப்பதெல்லாம் ஆதாரபூர்வமற்றது என்பது தெளிவாகிறது. ஷரீஆவின் சட்டங்களை தமது சுய விருப்பு வெறுப்புக் கேற்ப விளையாடுவதாகவே அமைகிறது.

இங்கு ஒரு சம்பவத்தை குறிப்பிட விரும்புகிறோம்.

ஹாபிழ் அபூ ஸர்ஆ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

ஹாபிழ் வலிய்யுல்லாஹ் ஈராகிய் ஆகிய எனது தந்தையும், இமாம் இப்னு ரஜப் ஹன்பலியும் சேர்ந்து, இப்றாஹீம் ﷺ அவர்கள் வாழ்ந்த ஊருக்கு சென்றார்கள். அதன் எல்லை நெறுங்கியதும், இமாம் இப்னு ரஜப் அவர்கள், மஸ்ஜிதுல் கலீலில் தொழ நிய்யத்து வைக்கிறேன் என்றார்கள். இமாம் இப்னு தைமியா அவர்களது கருத்துப்படி, ஸியாரத்துக்காக பிரயாணம் செய்யக் கூடாது. மேற்படி பள்ளிவாயிலில் இப்றாஹீம் ﷺ அவாகளின் கப்ரு இருப்பதால், அதைத்தவிர்க்கவே அவ்வாறு கூறினார்கள். அதைக் கேட்ட ஹாபிழ் அவர்கள், நீர் நபியவர்களுக்கு மாற்றம் செய்துவிட்டீர் மூன்று பள்ளிவாயல்களுக்கே அன்றி வேறு பயணப்படகூடாது என்ற நபி மொழியை மாற்றி நான்காவது பள்ளிவாயலுக்கு பிரயாணமாகி வந்துள்ளீர், நானோ நபியவர்களுக்கு வழிப்பட்டேன். கபுறுகளை தரிசியுங்கள் என்று பொதுவாகக் கூறினார்களே தவிர, நபிமார்களின் கபுருகளை தரிசிக்க வேண்டாம் எனக் கூறவில்லையே என்று பதிலளித்தார்கள். இமாம் இப்னு ரஜப் வாயடைத்துப போய் விட்டார்கள்.

طرح التثريب ٦ / ٤٣

(அ) யார் என்னுடைய கப்ரை தரிசிக்கிறாரோ அவருக்கு எனது ஷபாஅத் வாஜிபாகிவிட்டது.

الدارقطني ٢٧٢/٢

الدولابي في الكنى والاسماء ٦٤/٢

البيهقي في شعب الايمان ١٧٠/٣

الخطيب في تلخيص المتشابه ٥٨١/١

ابن عدي ٢٣٥٠/٦

العقيلي ١٧٠/٤

இவர்கள் யாவரும் பின்வரும் இரு தொடர்களின் மூலம் இநத ஹதீஸை ரிவாயத் செய்துள்ளனர்.

- மூஸா இப்னு ஹிலால் - உபைதுல்லா இப்னு உமர் - நாபி - இப்னு உமர்
- மூஸா இப்னு ஹிலால் - அபதுல்லாஹ் இப்னு உமர் - நாபி - இப்னு உமர்

அறிவிப்போர் வரிசையில் :-

மூஸா இப்னு ஹிலால் அல் - அப்திய்

இவர் யார் என அறியப்படாதவர் என சில இமாம்கள் குறிப்பிட்டாலும் அவர் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் அவர்களின் ஆசிரியராவார், என இமாம் இப்னு அத்தி கூறுகிறார்கள். இமாம் தஹபி இவருடைய ஹதீஸ்கள் ஏற்றுக்கொள்ளப் படக்கூடியவை எனக் கூறியுள்ளார்கள்.

ابن عدي في الكامل ٦ / ٣٢٥٠

الذهبي في ميزان الاعتدال ٢٢٦/٤

ميزان الاعتدال என்ற நூலில் இமாம் தகபி (ரஹ்) அவர்களின் நடைமுறையையும் வார்த்தைப் பிரயோகங்களையும் இமாம் அப்துல் ஹய் அல்-லக்னவி அவர்கள் பின்வருமாறு விளக்குகிறார்கள்.

முற்கால இமாம்களுக்கும் பிற்கால இமாம்களுக்கும் இது **முன்கரான ஹதீஸ்** என்ற வார்த்தைப் பிரயோகத்தில் வித்தியாசமுண்டு. முற்கால இமாம்களோ, தனிநபர் மாத்திரம் ரிவாயத் செய்வதை **முன்கருல் ஹதீஸ்** என்பர். பிற்கால இமாம்களோ, ஒரு பலயீனமான ராவி பல பல மானவர்களுக்கு மாற்றமாக ரிவாயத் செய்வதை **முன்கருல் ஹதீஸ்** என்பர்.

இதன் அடிப்படையில் யார் எனது கப்ரை தரிசிக்கிராரோ அவருக்கு எனது ஷபாஅத் வாஜிபாகிவிட்டது என்ற ஹதீஸை பலயீனமாகக் கருதியோர், கால் சருகி விழுந்து விட்டனர். அதன் அறிவிப்பாளர்களில் ஒருவராகிய மூஸாஇப்னு ஹிலால் என்பவரைப் பற்றி ميزان الاعتدال ல் இமாம் தகபி அவர்கள் குறிப்பிட்டதை வைத்து இந்த ஹதீஸை பலயீனமாகக் கருதினார்கள்.

الرفع والتكميل في الجرح والتعديل ، ص ٢١١

ஹதீஸ்கலையின் வாடைகூட இல்லாததால்தான் வஹ்ஹாபிகளுக்கு உண்மை புரியாது புத்திதடுமாறுகிறது. என்பது வாசகர்களுக்குப் புரியும். ஹதீஸ்கலையைப் புரிந்து கொள்ள வாசிப்புத்திறன் மட்டும் போதாது. ஆழ்ந்த அறிவும், அல்லாஹ்வின் அருளும், தூய எண்ணமும் வேண்டும். இங்கு, இமாம் தகபி அவர்களுடைய நடைமுறையை அறியாததால்தான, ஒரு சஹீஹான ஹதீஸை, பலயீனமாக்கி பாரிய ஒரு பிரச்சினையை ஏற்படுத்தி வைத்தனர். இப்போது புரிந்திருக்கும் இவர்களுடைய அறிவுத்திறன்!

உபைதுல்லா இப்னு உமர்

இவர் உறுதியானவரும், ஹதீஸ்கலையின் ஒரு ஹாபிழுமாவார். இவர் உறுதியானவர் என்பதை அறிந்த இப்னு அப்துல் ஹாதி என்பவர், (இப்னு தைமிய்யாவின் சீடர்) இந்த ஹதீஸை 'உபைதுல்லா' ரிவாயத் செய்யவில்லையெனவும், அடுத்த தொடரில் வரும் 'அப்துல்லா' என்பவரே ரிவாயத் செய்தார் எனவும் நிருபிக்க முயற்சித்தார். இது ஒரு மோசடியாகும். வஹ்ஹாபிகளின் பொற்கால வரலாற்றில்

இவ்வாறான ஏகப்பட்ட அறிவியல் மோசடிகள், ஆய்வியல் திருவிளையாடல்கள் இடம் பெற்றுள்ளதை ஆங்காங்கு கோடிட்டுக் காட்டியுள்ளோம்.

الصارم المنكي في الرد على السبكي لابن عبد الهادي ١٤ – ٢٣

உண்மை என்ன வென்றால், மேற்குறிப்பிடப்பட்ட இருவரும் (உபைதுல்லா + அப்துல்லா) இந்த ஹதீஸை ரிவாயத் செய்துள்ளார்கள், என்பதை வஹ்ஹாபிகளின் இன்றைய வழித் தோன்றல் நாஸிருத்தீன் அல்பானி அவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள்.

الارواء ٤ /٣٣٧٧

அப்துல்லா இப்னு உமர்

இவர் உண்மையானவர் எனவும், 'ஹஸனுல் ஹதீஸ்' எனவும் இமாம் தகபி குறிப்பிடுகிறார்கள். அவர் மார்க்கப்பற்றுடைய அறிஞராகவும் ஸாலிஹுல் ஹதீஸ் எனப்படுபவராகவும் இருந்தார் என இமாம் ஸகாவி அவர்கள் கூறிப்பிடுகிறார்கள்.

الذهبي في المغني ٣٤٨/١

الذهبي في الكاشف ٩٩/٢

الذهبي في الديوان ١١٢

الحافظ السخاوي في التحفة اللطيفة ٣/ ٣٦٦

الكامل ١٤٥٩/٤

மேற்கூறப்பட்ட விடயங்களிலிருந்து இந்த ஹதீஸ் 'ஹஸன்' எனும் வகையை சேருகிறது என்பது தெளிவாகிறது.

(ஆ) யார் என்னுடைய கப்ருக்கருகில் நின்று ஸலவாத் சொன்னால் அதை நான் செவிமடுப்பேன். யார் தூர இடத்தில் இருந்து ஸலவாத் சொன்னால் அது எனக்கு அறிவிக்கப்படும்.

ابو المشيخ الاصبهاني في الثواب ، القول البديع ١٥٤

அபூ-ஷைக் அல் அஸ்பகானி அவர்கள் கூறும் இந்த ஹதீஸின் ராவிகளின் தொடரில் வரும், அனைத்து ராவிகளும் (ஒருவரைத்தவிர)

ஏற்றுக் கொள்ளப்படக்கூடியவர்கள். ஆனால், அஸ்பகானியின், ஆசிரியர் பற்றித்தான் சர்ச்சை எழும்புகிறது. அவரைப் பற்றி அவரது சீடரும் எழுதியுள்ளார்கள்.

طبقات المحدثين ٣ /٥٤١ ، أخبار اصبهان لابي نعيم ٢ /١١٣

இவ்விருவரும் (அஸ்பகானி + அபூநயீம்) இந்த ராவி பற்றி சாதகமாகவோ பாதகமாகவோ குறிப்பிடவில்லை. ஆனால் மிகுதமானோர் அவரிடமிருந்து ஹதீஸ்களை ரிவாயத் செய்துள்ளனர். அதிசயமான ஒரு கருத்தையோ அல்லது பெரும்பான்மையோர்கு மாற்றமாகவோ, ரிவாயத் செய்யாத நிலையில் இவரது ஹதீஸ்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அவர் மஸ்தூர் எனும் வகையை சேர்வார். அவர், இமாம் இப்னு ஹிப்பானின் நிபந்தனைகளின்படி ஏற்றுக் கொள்ளப்படுவார்.

இவர்களைப் பற்றி இமாம் தகபி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

(பரிசுத்தக் கிரந்தங்களிலும் பல ராவிகள் உள்ளனர். அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவர்கள் என யாராவது கூறியிருக்கிறார்களா? என்று எமக்குத்தெரியாது. அவ்வாறானவர்களிடமிருந்து, பலர் ரிவாயத் செய்வதால் அவர்களுடைய ஹதீஸ்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

ميزان الاعتدال ٣ /٤٢٦

மேலும், இமாம் தகபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : (இவ்வாறு மறைமுகமான ராவிகள் பற்றி, சாதகமாவோ, பாதகமாகவோ எக்கருத்தும் கூறப்படவில்லையாயின், அவர்களது ஹதீஸ்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

ميزان الاعتدال ٢ / ٩٣

ஆக இந்நத ஹதீஸ் பலமானது என்று தெளிவாகிறது. அதுபற்றி இமாம் இப்னு ஹஜர் அவர்களும் அவர்களது மானவராகிய ஹாபிழ் சகாவி அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள்.

القول البديع ١٥٤

ஆக, இந்த ஹதீஸிக்கு, வேறொரு தொடரும் உண்டு, அதில் முஹம்மத் இப்னு மர்வான் அஸ்ஸுத்தி எனும் மிகபலயீனமானவர் இடம் பெறுகிறார். அதன் அடிப்படையில்தான் இமாம் இப்னு தைமியா அவர்களும் அவரது சீடர் இப்னு அப்துல் ஹாதியும் இதை இட்டுக்கட்டப்பட்டது என்று கூறியுள்ளார்கள்.

الصارم المنكى ٢٠٥

ஆக, இவரது கருத்து முதல் ரிவாயத் தொடர் பற்றியது அல்ல என்பதையும், வஹ்ஹாபிகளின் அறிவுத்திறமையையும், வாசகர்கள் புரிந்து கொள்ளட்டும்.

(இ) நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்.

நீதியான ஆட்சியாளராகவும், நேர்மையான தலைவராகவும் நபி ﷺ ஈஸா அவர்கள் இறங்குவார்கள் ஹஜ்ஜிக்காக, அல்லது உம்ராவுக்காக, அல்லது இரண்டுக்குமாக நாடி என்னுடைய கபுருக்கு வந்து ஸலாம் சொல்வார்கள். நானும் பதிலளிப்பேன்.

المستدرك ٥٩٥/٢

இந்த ஹதீஸ் சஹீஹானது. ஆனால் புஹாரி, முஸ்லிம் கிரந்தங்களில் கூறப்படவில்லை என்கிறார்கள், இமாம் ஹாகிம் அவர்கள். இந்த ஹதீஸுக்கு பல ரிவாயத்துக்கள் இருப்பினும், இந்த ரிவாயத்தையே இமாம் அபூ ஸர்ஆ அவர்கள் முற்படுத்தியுள்ளார்கள்.

العلل ٢٧٤٧

(ஈ) நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள். யார் என்னுடைய மரணத்துக்குப் பின் என்னை தரிசிக்கிறாரோ, அவர் என்னை எனது வாழ்வில் சந்தித்தது போன்றவர் ஆவார். யார் என்னுடைய கபுரு வரையில் வந்து தரிசிக்கிறாரோ அவருக்கு நான் கியாமத்து நாளில் சாட்சியாளராய் இருப்பேன்.

العقيلي في الضعفاء ٤٥٧/٣

இதன் ராவிகளில் ஒருவரான فضالة بن سعيد المأربي என்பவரினால், இது பலயீனமான ரிவாயத்தாக கருதப்படுகிறது. இமாம் அகீய்லி அவர்கள் கூறுகிறார்கள். இந்த ரிவாயத்தில் லய்யின் எனப்படும் உறுதியின்மை காணப்படுகிறது. அது பலவீனத்தின் மிகக் குறைந்த பங்காகும். ஆக இந்த ஹதீஸ் பலயீனமானது என்றால் அது பொய்யானது

எனப்பொருள்படாது. விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று நிறைவேறியிருக்கவில்லை. எனினும், இந்த பலயீனமான ஹதீஸை இதற்குமுன் கூறப்பட்டுள்ள சஹீஹான ஹதீஸ்களின் தொடரில் உணர்ந்து கொள்ளலாம்.

மூன்றாவது :

இஜ்மா

القاضي عياض கூறுகிறார்கள்:

நபியவர்களின் கப்ரை தரிசிப்பது, முஸ்லிம்களின் ஏகோபித்த சுன்னத்- தாகும்.

الشفا بتعريف حقوق المصطفى ٧٤/٢

மேலும், ஸியாரத் செய்வது ஆகுமாக்கப்பட்டிருப்பினும் நபியவர்களை தரிசிக்கச் செல்வது கட்டாய கடமையாகும்.

الشفا ٧٥/٢

இவ்வாறு நபியவர்களை தரிசிக்கச் செல்வது சுன்னத்தான அமலே, என்பதில் ஏகோபித்த முடிவை இமாம் சுப்கி, இமாம் நவவி, இமாம் ஷவ்கானி ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

نيل الاوطار ١١٠/٥

இமாம் அபுல் ஹஸனாத் அல்-லக்னவி அவர்கள் கூறுகிறார்கள் :- நபியவர்களை தரிசிக்கச் செல்வது மிகச் சிறந்த வணக்கங்களில் ஒன்றாகும். என்பதில், இப்னு தைமியாவின் காலம் வரை இமாம்களிடத்தில் தருத்து வேறுபாடிருக்கவில்லை. அது சுன்னத்தா? அல்லது வாஜிபா? என்பதிலேயே மாறுபட்டிருந்தனர்.

நபி ﷺ அவர்களை தரிசிக்கச் செல்லக்கூடாது. அப்பயணம் பாவமான காரியமாகக் கருதப்படும். எனவே, அப்பயணத்தில் தொழுகைகளை சுருக்கித் தொழமுடியாது. என்பது இமாம் இப்னு தைமியாவின் கருத்தாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் இவ்வாறான கீழ்த்தரமான ஒரு கருத்தை அவருக்குமுன் யாரும் கூறியதாக அறியப்படவில்லை.

இக்கருத்தை கண்டிக்கும் இமாம் இப்னு ஹஜ்ர் (ரஹ்) அவர்கள், இக்கருத்து மிகப் படுமோசமானது என்கிறார்கள்.

فتح الباري ٣/ ٦٦

அதை ஹாபிழ் - அபூ ஸிர்ஆ அவர்களும் கூறியுள்ளார்கள்.

طرح التثريب

இப்போது இப்னு தைமியாவின் அடிப்படை ஆதாரத்தைப் பார்ப்போம்.

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :
மூன்று பள்ளி வாயல்களைத் தவிர வேறு எந்தப் (பள்ளிக்கும்) பயணப்படமாட்டாது. அவை, ஹராம் ஷரீப், அக்ஸா பள்ளிவாயல், என்னுடைய (மதீனா) பள்ளிவாயால்.

தெளிவு :

முதலில், இந்த ஹதீஸுக்கும், இவ்விடயத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்பதை கவனித்தில்கொள்க. இந்த ஹதீஸ் வேறொரு விடயம் சம்பந்தப்பட்டது என்பதை பின்வரும் விடயங்க-

மூன்று பள்ளியைத்தவிர என்ற வசன நடைக்கு அரபிலக்கணத்தில் الاستثناء المفرغ என்று சொல்லப்படும், அதன் விதிகளின்படி, ஒதுக்கப்பட்டவிடயமும் - (மூன்று பள்ளியை தவிர) المستثنى بـه

எதிலிருந்து பிரித்து ஒதுக்கப்பட்டதோ (வேறு எங்கும்) المستثنى منه ஒரே வகையாக இருக்க வேண்டும். அவ்விதிகளின்படி இந்த ஹதீஸை இவ்வாறு தெளிவுபடுத்தலாம்.

மூன்று பள்ளிவாயல்களைத் தவிர வேறு எந்தப் பள்ளிவாயல்களுக்கும் பயணப்படமாட்டாது.

இக்கருத்தை இமாம் அஹ்மத், இமாம் கஸ்ஸாலி, இமாம் அல் கர்கீய் ஆகியோர் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

شرح الكوكب المنير لابن النجار الحنبلي ٢٨٦/٣

المنخول ص ١٥٩

المدخل ص ١١٧

الكواكب الدراري شرح صحيح البخاري ١٢٠/٧

عمدة القاري للعيني ٢٧٦/٦ ، فتح الباري ٦٦/٣

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் தொழுவதற்காக வேண்டி மூன்று பள்ளிகளைத் தவிர வேறு எங்கும் பிரயாணப்படக்கூடாது.

مسند الامام احمد ٣/ ٦٤ ، ٩٣

مسند ابي يعلى ٤٨٩/٢

இந்த தெளிவான ஹதீஸை شهر بن حوشب என்பவர் ரிவாயத் செய்துள்ளார்கள். அவரைப்பற்றி இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகையில் சிறிது பலயீனம் இருந்தாலும் அவர் ஹஸனுல் ஹதீஸ் என்கிறார்கள்.

فتح الباري ٦٥/٣

இதே கருத்தை ஹாபிழ் தகபி அவர்களும் கூறியுள்ளார்கள்.

جزء من تكلم فيه ١٠٠

ஆக, இரு பெரும் இமாம்கள் இந்த ஹதீஸை ஹஸனாக ஏற்கும்போது குழப்பவாதிகளின் குழறுபடிகளுக்கு மு'மீன்கள் செவிசாய்க்க வேண்டியதில்லை. இரண்டாவது இந்த ஹதீஸ்

நிரூபனமாகி, முதல் ஹதீஸை விளக்குவதால், இப்னு தைமியாவின் கருத்து அர்த்தமற்றது என்பது புலனாகிறது.

(3) இமாம் சுப்கி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள், பயணங்கள் இரு வகைப்படும்.

ஒன்று ஒரு நோக்கத்தை அடையச் செல்லது. அறிவைத்தேடிச் செல்வது, பெற்றோரை சந்திக்கச் செல்வது போன்றன.

இரண்டு ஒரு இடத்தை நோக்கிச் செல்வது. மக்கா மதீனா போன்ற இடங்களை நோக்கிச் செல்வதுபோல.

இந்த ஹதீஸ் இரண்டாம் வகையைச் சேரும். ஆனால் நபியவர்களை தரிசிக்கச் செல்பவர் இந்த இரண்டாம் வகையை சேரமாட்டார். ஏனெனில் அவர் அந்த இடத்தை கண்ணியப்படுத்தச் செல்லவில்லை. மாறாக அங்கே இருப்பவரையே (முதல் வகை) தரிசிக்கச்செல்கிறார். ஆக, இந்த ஹதீஸுக்கும் இவ்விடயத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பது புலனாகிறது.

شفاء السقام ١٢١

(4) இந்த ஹதீஸில் அவ்வாறு பிரயாணம் செய்வது ஹராமாக்கப்படவில்லை. மாறாக இம்மூன்று பள்ளிவாயல்களின் பிரத்தியேக சிறப்புக்களே கூறப்பட்டுள்ளன.

இந்த ஹதீஸில் பிரயானம் செய்வது ஹராமாக்கப்படவில்லை என்ற எமது கூற்றுக்கு ஆதாரமாக பின்வரும் விடயங்களை குறிப்பிடுகிறோம்.

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் :

கூபா (பள்ளி) யின் சிறப்பை மக்கள் அறிந்து கொன்டால், தமது ஒட்டகைகளை வேகமாக ஒட்டிச் செல்வர்

أخبار المدينة ٤٢/١

مصنف ابي شيبة ٣٧٣/٢

مصنف عبد الرزاق ١٣٣/٥

ஹாபிழ் இப் ஹஜ்ர் (ரஹ்) அவர்கள், இதனுடைய இஸ்னாத் சரியானது என்கிறாரகள்.

فتح الباري ٣ / ٦٩

நபி ﷺ கூறுகிறார்கள் :

பிரயாணங்களில் மிகச் சிறந்தது. இப்றஹீம் (அலை) அவர்களது பள்ளிவாயலுக்கும், எனது (நபியவர்கள்) பள்ளிவாயலுக்குமான பிரயாணமுமே.

مسند أحمد ٣/٣٣٦

كشف الاستار للبزار ٢/٤

مشكل الاثار للطحاوي ١/٢٤١

அபூ பஸ்ரத் அல் -கப்பாரி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். தூர் மலைப்பள்ளியில் தொழுவதற்காக சென்று கொண்டிருந்த அபூ ஹுரைராவை சந்தித்தேன். நீர் புறப்படுவதற்கு முன் என்னை சந்தித்திருந்தால் நீர் பிரயாணப்பட்டிருக்க மாட்டீர். ஏன்? என்றார். அதற்கு, நான், நபியவர்கள் சொல்ல நான் கேட்டுள்ளேன் மூன்று பள்ளிவாயல்களைத் தவிர வேறு எங்கும் செல்லக் கூடாது.

مسند الامام أحمد ٦/٣٩٧

இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டும். அபூ ஹுரைரா ؓ அவர்கள் இந்த ஹதீஸைக் கேட்டும், தனது பயணத்தை நிறுத்தி வீடு திரும்பவில்லை. காரணம், இந்த ஹதீஸ் ஹராத்தை குறிக்கவில்லை என்பது ஆபு ஹுரைராவுக்கு அன்றே புரிந்திருந்தது. ஆனால், இன்று கூட வஹ்ஹாபிகளால் இதை புரிந்து கொள்ள முடியவில்லையே. என்பதுதான் ஆச்சிரியம்.

இந்த மூன்று ஹதீஸ்களின் நிழலில் ஒரு விடயம் திட்டவட்டமாக தெரியவருகிறது. மூன்று பள்ளி வாயல்களைத் தவிர வேறு எங்கும் பயணப்படக் கூடாது என்ற ஹதீஸ், அம்மூன்று பள்ளி வாயல்களின் சிறப்பை கோடிட்டுக் காட்டுகிறதே தவிர வேறு எங்கும் பிரயாணப்படுவது ஹராமானது என்று கூறவில்லை.

இந்த மூன்று பள்ளிவாயல்கள் தவிர வேறு எங்காவது செல்ல நேர்ச்சை செய்தால் அதை நிறை வேற்ற வேண்டுமா?

இமாம் கத்தாபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:-

(குறிப்பிடப்பட்ட பள்ளி வாயல்களில் தொழுவதுக்கு நேர்ச்சை செய்தால், அதை குறிப்பிடப்பட்ட பள்ளியிலும் தொழலாம். அல்லது வேறு எங்காவது நிறைவேற்றலாம். ஆனால் இம்மூன்று பள்ளிவாயல்களில் தொழ யாராவது நேர்ச்சை வைத்தால் அதை நிறை வேற்றுவது அவரது கட்டாயக் கடமையாகும்)

معالم السنن ٢/٤٤٣

شرح مسلم ٩/ ١٠٦

المغني لابن قدامة ٢/١٠٣–١٠٤

புனித கப்ரு ஷரீபில் சென்று துஆச் செய்வது முன்னோர் முதல் இன்றுவரை நடைமுறையாகும்.

- ஸயீத் இப்னு அப்துல் மலிக் கூறுகிறார்கள். பள்ளி வாயல் ஒய்ந்து விடும் வேளைகளில் நபித் தோழர்களில் சிலர் அன்னாரின் மிம்பரை தொட்டுத் தொட்டு தடாவிக் கொண்டு துஆச் செய்வதை கண்டுள்ளேன்.

مصنف ابي شيبة ٥٥٧/٤

- அனஸ் இப்னு மாலிக் ﷺ அவர்கள் இரு கரங்களையும் ஏந்தி அங்கே துஆச் செய்வார்கள்.

نسيم الرياض ٣ / ٥١٧

மேலும், இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:-

நபியவர்களுக்கு ஸலாம் சொல்லும் போது, புனித கப்ரை முன்னோக்கி நின்று துஆச் செய்ய வேண்டும்.

نسيم الرياض ٥١٧/٣

இது பற்றிய விபரங்களை, இமாம் நவவி (رؤوس المسائل), இமாம் ஆஜுரிய் (الشريعة) இமாம் இஸ்ஸுத்தீன் அப்துஸ்ஸலாம் போன்றோரும் ஹஜ் பற்றிய சட்டவிளக்க நூற்களிலும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும், புனித கப்ர் ஷரீபை முன்னோக்கி துஆச் செய்ய வேண்டும் என்று இமாம் அபுல்வபா, இமாம் இப்னு குதாமா, இமாம் சுப்கி ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

المغني لابن قدامة ٥٣/٣

الايضاح ٥١٩

شفاء السقام ١٥٣

மேலும் இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் புனித கப்ருக்கு முன்னின்று துஆச் செய்வதுபற்றிக் குறிப்பிடுகையில் நபியவர்களளின் பொருட்டினால் உனது தேவைகளை நிறைவேற்றி வைக்குமாறு அல்லாஹ்விடம் கேள் என்கிறார்கள்.

الرد على الاخنائي لابن تيمية ١٦٨

மேலும் அவ்வாறு கப்ருக்கு முன்னால் துஆக் கேட்போர் வரிசையில் இமாம்களான மாலிக், அஹ்மத், அபூ ஹனீபா, போன்றோருடன் இன்னும் பல ஸலபுகளை இமாம் இப்னு தைமியாவே குறிப்பிட்டுள்ளார்கள். மேலும், அப்துல்லா இப்னு உமர் ﷺ அவர்கள், நபியவர்களின் மின்பரை தொட்டுத் தடவிக் கொள்வார்கள். மேலும், அவர்கள் புனித கப்ருடன் தனது வயிற்றை ஒன்று சேர்த்து வைத்துக் கொள்வதாகவும், ஏனையோரும் அவ்வாறு செய்வதாகவும் இமாம் இப்னு தைமியாவே குறிப்பிட்டுள்ளார்கள்.

الرد على الاخنائي لابن تيمية ١٦٩

இமாம் தகபி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் :-

அப்துல்லா இப்னு உமர் ﷺ அவர்கள், நபி ﷺ அவர்களின் கப்ரை தொடுவதை விரும்பாததற்கு காரணம் அதை ஒரு ஒழுக்கமற்ற செயலனக் கருதினார்கள். ஆனால், இமாம் அஹ்மதிடம், நபியவர்களின் கப்ரை தொட்டு முத்தமிடுவது கூடுமா? எனக் கேட்கப்பட்டபோது அதை ஒழுக்கயீனமான செயலாகத் கருதவில்லை என்று அவர்களுடைய மகனே உறுதிப்படுத்தியுள்ளார்கள். சஹாபாக்கள் அப்படிச் செய்தார்களா? என்று யாரும் கேட்கலாம். அவர்களோ ஒன்றாக உயிர்வாழ்ந்து உறவாடியவர்கள். அவர்களின் புனிதக் கரங்களை முத்தமிட்டவர்கள். அவர்கள் வுழூச் செய்து மீதியிருந்த நீரையும் கொட்டிய நீரையும் அடைந்து கொள்ள போட்டியிட்டவர்கள். ஹஜ் கடமையின் போது நபியவர்களின் தலை மயிரை தங்களுக்கிடையில் பங்கு போட்டுக கொண்டவர்கள். அவரது காரல்களை எச்சில்களை தமது கரங்களால் தாங்கி முகமெல்லாம் தடவிக் கொண்டவர்கள்.

எங்களுக்கோ அப்பாக்கியம் கிடைக்காததால், அன்னாரை தரிசிக்கச் செல்லும் போது, அவர்களது கப்ரை தொட்டு, தடவி, முத்தமிட்டு எமதன்பைக் காட்டுகிறோம். ஸாபித் அல் பன்னாநீய் என்பவர், அனஸ் ﷺ அவர்களின் கைகளை முத்தமிட்டு தனது முகத்திலே

வைத்துக் கொண்டு 'நபியவர்களை தொட்டகரங்கள்' என்று கூறுவார்கள்.

இக்கருமங்கள் நபி ﷺ அவர்கள் மீது கொண்ட அன்பால் ஏற்பட்டவை யாகும், தனது ஆத்மா குழந்தை அனைத்து மனிதர்கள், சொத்து, சுவனம், அதன் கன்னியர் அனைத்தையும் விட, அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அன்பு கொள்ளுமாறு ஏவப்பட்டுள்ளோம். நபி ﷺ அவர்கள் மீது கொண்ட எல்லையற்ற அன்பால் நபியே! உங்களுக்கு ஸுஜூது செய்யட்டுமா? என்று வினவினார்கள் சஹாபாக்கள். நபியவர்கள் அதை அனுமதிக்கவில்லை. அவ்வாறு அனுமதித்திருந்தால், பர்ளாக்கப்பட்ட ஸுஜூத் அன்றி, யூசுப் عليه السلام அவர்களின் சகோதரர்கள் செய்தது போன்று கண்ணியத்துக்காக சிரம் தாழ்தியிருப்பார்கள்.

معجم الشيوخ ١/ ٧٣ - ٧٤

இவ்வாறு முன்னோர்களான இமாம்களே, நபியவர்களின் கபுருக்கு அருகில் நின்று துஆச் செய்வதை வலியுறுத்தும் போது, நேற்று முளைத்த காளான்களுக்கு நீங்கள் செவிமடுக்க வேண்டுமா? பணத்துக்கும் பேரீச்சம் பழத்துக்கும், சஞ்சிக் கோப்பைக்கும், இறைச்சிப் பார்சலுக்கும் நீங்கள் விலை போக வேண்டுமா? சிந்தியுங்கள் சீர்வழியடைவீர்.

சவூதியைச் சேர்ந்த அஷ்-ஷைய்க் ஸாலிஹ் அல் பவ்ஸான் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்கள்.

அந்த இடத்தில் அல்லாஹ்விடம்தான் துஆக் கேட்டாலும் அது ஒரு பித்அத்தும் ஷிர்க்குக்கான வழியுமாகும். ஸலபுகள் (முன்னோர்கள்) அவ்வாறு செய்யவில்லை.

'இவ்வாறான கருத்துக்களால் பிரச்சினைகள் தோன்றுவதும், ஸலபுகளை நிந்திப்பதும், இமாம்களுக்கு மாற்றம் செய்வதும் மு.'.மின்களை பலவாறு குற்றம் சுமத்துவதும்தான் ஏற்பட்டது. இவர்களது முழு முயற்சியும், முஸ்லிம்களை மதீனாவுக்கு செல்லாமல் தடுப்பதே. ஒரு முறை ஹஜ்ஜுக்கும் ஸியாரத்துக்கும் தொடர்பில்லை என்பர். மறுமுறை ஸியாரத் கடமை இல்லை என்பர். நபி ﷺ அவர்கள் மீது வஹ்ஹாபிகளின் வக்கிர வெறுப்பால், எப்படியாவது கோடானகோடி நெஞ்சங்களை மதீனாவுக்குச்

செல்லாமல் தடுக்க முயற்சிக்கின்றனர். பகிரங்கமாகச் சொல்ல கோழைகளுக்கு இன்னமும் தைரியம் பிறக்க வில்லை. பிறக்கப் போவதுமில்லை. எனவேதான் மதீனாபள்ளிவாயலில் தொழுவதற்காகச் செல்லுங்கள் எனப் போதிக்கின்றனர். இது குழந்தைத்தனமான போதனை என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். எந்த மடையனும் மக்காவில் ஒரு இலட்சம் நன்மையை விட்டு, மதீனாவுக்கு ஆயிரம் நன்மைக்காக செல்ல மாட்டான், என்பதை புத்தியுள்ள !!! வஹ்ஹாபிகளே புரிந்து கொள்ளுங்கள்.

எனவேதான், சத்திய உலமாக்கள், உண்மையை எடுத்தியம்பி, ஸியாரத்தின் மகிமையை விளக்கி இஸ்லாமிய நெஞ்சங்களில் நபியவர்களின் காதல் அலைகளைப் பரவச் செய்ய வேண்டும். நபியவர்கள் புனித கப்ரிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எமது ஸலாம்களை செவிமடுத்து பதிலுமளிக்கிறார்கள். ஏனைய கப்ருகளுக்கு இல்லாத சிறப்பம்சங்கள் அவர்களுடைய கபுருக்கு உண்டு என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

- **அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் நபியவர்களுடைய கபுருக்கருகில் நின்று அவர் பொருட்டினால் மழை வேண்டிப் பிரார்த்தித்தார்கள்.**

سنن الدارمي ١/ ٤٣

- ஸஈத் இப்னு அப்துல் அஸீஸ் கூறுகிறார்கள். 'அய்யாமுல் ஹர்ரா' என்ற யஸீதின் மதீனா மீதான படையெடுப்பின் போது அண்ணலாரின் பள்ளியில் மூன்று நாட்களாக அதான் ஒலிக்கவுமில்லை. தொழுகை நடாத்தப்படவுமில்லை. ஆனால், ஸஈத் இப்னு இல் முஸய்யிப் அவர்கள் பள்ளியின் உள்ளே இருந்தார்கள். தொழுகையுடைய நேரம் நெருங்கியதும் அன்னலாரின் புனித கப்ரில் இருந்து ஒரு சத்தம் வெளியாகும். அதைக் கொண்டுதான் தொழுகை நேரத்தை அறிந்து கொண்டார்கள்.

سنن الدارمي ١/ ٤٤

- இமாம் இப்னு தைமியா கூறுகிறார்கள் :-

'ஸஈத் இப்னுல் முஸய்யிப் புனித கப்ரில் இருந்து அதான் சத்தத்தை மூன்று நாட்களாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.'

اقتضاء الصراط المستقيم لابن تيمية ٣٧٣

ஸஈத் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் உறுதியானவர்கள். அவரது கடைசிக் காலத்தில் நினைவுத் தடுமாற்றம் ஏற்பட்டது உண்மையே. ஆனால். அக்காலத்தில் ரிவாயத் செய்வதை அவர்களே தவிர்த்துக் கொண்டார்கள் எனவே அவரது ஹதீஸ் ஸஹீஹானது. இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் இவரை ஆதாரமாகக் கொண்டார்கள்.

مسؤلات الدوري ٢ / ٢٠٤

இவ்வாறு தெளிவான ஆதாரங்கள் இருந்தும் ‘ஸலபுகள்‘ எனப்படும் முன்னோர் முதல் தொடர்வழியான இமாம்கள்வரை அனைவரும் அமல் செய்து வந்தும் கூட, அஷ்-ஷைக் பவ்ஸான் போன்றோர் துணிந்து ‘யாருமே துஆச் செய்யவில்லை‘ என்று **பச்சைப் பொய்யை** புழுகுவது ஆச்சரியமே.

வஹ்ஹாபிகளின் அடிப்படை மனநோய்களில் உள்ளதுதான் சிர்க், குப்ரு, பித்அத் என்ற அடை மொழிகள். அதன் யாதார்தம், தாத்பரியம் என்பவைகள் அவர்களுக்கு மாத்திரம்தான் புரியும்.

கடைசியாக ஒரு வார்த்தை

'தனது கப்ரை கொண்டாட்டத்தளமாக ஆக்கி விடாதே' என்று நபி ﷺ அவர்களே பிரார்த்தித்துள்ளார்கள். நிச்சயமாக அவரது பிராத்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும். என்றால் அவ்வாறாக ஏதும் அங்கு நடைபெற மாட்டாது. நடை பெறவும் முடியாது. கூடாது. அது அல்லா- ஹ்வின் பரிசுத்தப் பாதுகாப்பாகும்.

நீங்கள் சொல்வதுதான் ஷிர்க்குக்கு வரைவிலக்கணமாக, மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எவ்விதக் கட்டாயமுமில்லை.

புனித கப்ர் ஷரீபுக்கு முன்னால் அமைதியாய் அடக்கமாய் நின்று ஸலாம் சொல்லல், அவாகளது கப்ரையும், அப்பள்ளிவாயலில் அவர்களது புனிதப் பாதம் பதிந்த இடங்களை தொட்டுத் தடவி அனைத்து முத்தமிடுவது சிர்க்காகும் என தொண்டைக் கிழிய கொக்கரிக்கும் வஹ்ஹாபிய வாரிசுகளே!
எச்சில் பிச்சைக் காசுக்காக உலகெங்கும் அட்டகாசம் புரிந்து முஸ்லிம்களை பிளவுபடுத்தி கூறுபோட்ட நீங்கள், ரியாலையும் தீனாரையம் அல்லாஹ்வுடன் ஒன்று சேர்த்தது ஷிர்க்காகாதா?

சூராவின் அடிப்படையின்றி, அடாவடித்தனமாக பள்ளிவாயல்களில் நிர்வாகப் பொறுப்புக்களை பறித்துக் கொண்ட நீங்கள் அதனை தக்கவைத்துக் கொள்ள சூனியத்தை நாடினீர்களே அது ஷிர்க்காகாதா?
கற்றுத் தந்த ஆசான்களையே நீதிமன்றங்களில் ஏற வைத்து, நஷ்டஈட்டுப் பணம் பெற்றுக் கொண்டீர்களே, இது எப்படி ஹலாலாகும் ???

ஒன்றை ஆழமாக அசை போடவும், உலகின் எந்த மு.ஃ.மீனும், சுயபுத்தியுடனும், தூய வழிகாட்டல் இருந்தும் வேண்டுமென்றே ஷிர்க்கான, குப்ரான காரியங்களில் இறங்கமாட்டான். உங்களால் இவ்வளவு கூக்குரலிட முடிந்ததே. ஒரு முறையாவது நாம் கூறுவதை நிதானமாக சிந்தித்ததுண்டா? ஆழமாய் நோக்கவும், அல்லாஹ் உங்களுக்கும் எங்களுக்கும் முழு இஸ்லாமிய சமூகத்துக்கும் சீரான வழியை காட்டுவானாக.

آمين والحمد لله رب العالمين .

கால நேர நெருக்கடிகளுக்கு மத்தியில் அவசரமாக இதை வெளியிட வேண்டி ஏற்பட்டது. எனது திட்டப்படி இந்நூலில் பின்வரும் விடயங்களும் சேர்க்கப்பட வேண்டியிருந்தது.

- மா நபியின் சிறப்புகள்.
- நபிகள் நாயகம் ﷺ நம் போன்ற சாதாரன மனிதரா?
- மனிதத் தன்மையும் நபித்துவமும் ஒற்றுமையும் வேற்றுமையும்
- நபிகள் ﷺ அவர்கள் வெறும் தூதரா?
- அவர்கள் மீது ஏன் ஸலவாத் சொல்ல வேண்டும்.?
- நபிமீது அன்பும் வஹ்ஹாபிகளின் வெறுப்பும்.
- மதீனா நகரின் சிறப்பு. ஏன்? எதற்கு?
- கப்ருகளை சுற்றி கட்டிடம் அமைக்கலாமா?
- பள்ளி வாயலின் உள்ளே கப்ருகள் இருக்கலாமா? அப்பள்ளிகளில் தொழலாமா? அதன் சட்டங்கள்.
- ஸியாரத்தின் ஒழுங்குகளும், ஒழுக்கங்களும்.
- ஸியாரங்களின் பெயரால் நடக்கும் அத்து மீறிய ஒழுக்கயீனங்கள். ஸியாரங்களும், போலி சுன்னத்வல் ஜமாஅத்தினர்களும்.

போன்றவைகள்.

இன்ஷா அல்லாஹ், அல்லாஹ்வின் அருளும். கண்மனியின் ஆசீர்வாதமும் எனக்கு கிடைக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ் அதன் பொருட்டால் எனது பனியைத் தொடர முடியும்.

ஆக, இச்சிறு முயற்சியால், தமிழ்பேசும் முஸ்லிம் மக்களுக்கு, மதீனாவை நோக்கி மஹ்மூது நபியை தரிசிக்கச் செல்வதின் சிறப்பும், கடமையும் புரிந்திருக்கும்.

நாங்கள்தான் அறிஞர்கள் என்று, வீராப்புப் பேசும் வஹ்ஹாபிகளும், அவர்களது தலைவர்களும் எந்த அளவு புத்திசுயாதீனமுடையோர் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வர். அவர்களது அறிவுத் திறமையையும், குர்ஆன்• ஹதீஸ் பற்றிய அறிவு ஞானத்தையும்

தெட்டத் தெளிவாக படம் பிடித்துக் காட்டியுள்ளோம். இதற்குப் பின்பும் நீங்கள் முரண்டு பிடித்தால் நாம் சொல்வது ஒன்றே.

انا لله وانا اليه راجعون